
MAR.
1978 பங்குனி

# கமநலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## PUBLICATIONS OF THE AGRARIAN RESEARCH AND TRAINING INSTITUTE

| *Research Study Series* | | | *Local* |
|---|---|---|---|
| 1. | Cost of Production of Paddy—Yala 1975 by Izumi. K. and Ranatunga, A.S. ... ... ... ... ... ... | Rs. | 5.00 |
| 2. | Economics of Vegetable Production and Marketing by Abeysekera, Terrence and Senanayake, Piyadasa ... ... | ,, | 5.00 |
| 3 | Small Farmer Credit by Khan, Akthar, A. and Gunadasa, J. M. ... ... ... | ,, | 5.00 |
| 4. | Production of Other Crops in Paddy Fields—Yala 1971 by Izumi, K. and Ranatunga, A. S. ... ... ... ... | ,, | 5.00 |
| 5. | New Settlement Schemes in Sri Lanka by Ellman, A. O. and Ratnaweera, D. de S. ... ... ... | ,, | 5.00 |
| | The Agrarian Situation Relating to Paddy Cultivation in Five Selected Districts of Sri Lanka | | |
| 6. | Part 1 — Hambantota District ... ... ... ... | ,, | 10.00 |
| 7. | Part 2 — Kandy District ... ... ... ... ... | ,, | 10.00 |
| 8. | Part 3 — Polonnaruwa District ... ... ... ... | ,, | 10.00 |
| 9. | Part 4 — Anuradhapura District ... ... ... ... | ,, | 10.00 |
| 10. | Part 5 — Colombo District ... ... ... ... | ,, | 10.00 |
| 11. | Part 6 — A Comparative Analysis ... ... ... ... | ,, | 10.00 |
| 12. | Cost of Production of Paddy—Maha 1972/73 by Izumi, K. and Ranatunga, A. S. ... ... ... ... | ,, | 5.00 |
| 13. | A. Socio—Economic Survey of the Beminiwatte Agricultural Productivity Committee Area ... ... ... | ,, | 10.00 |
| 14. | A Study of Class II Coconut Lands in the Colombo District (to be released shortly) ... ... ... ... ... | ,, | 10.00 |
| 15. | A Study of Agricultural Extension, Training and Communication in Colombo District with Special Reference to Six Selected Villages in the Class II Coconut Area by Asmar, S. Nikahetiya, S.B.R. and Yapa, L. G. ... ... | ,, | 5.00 |
| 16. | Land Settlement in Sri Lanka—A review of major writings on the subject by Ellman, A. O., Ratnaweera, D. de S., Silva, K. T. and Wickremasinghe, G. ... ... ... ... ... | ,, | 2.00 |
| | A Study of Communication Flow in Selected Villages in Sri Lanka—Uhana Colony ... ... ... ... ... ... by Wanigaratne, R. D. | ,, | 5.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No. 986

# கமநலம்

மலர் 5
இதழ் 1
1978 பங்குனி

கமக்காரர்களின் மத்தியில் தன்னம்பிக்கையையும், மன உறுதியையும் ஏற்படுத்தி, அவர்கள் கிராமிய நிறுவனங்களின் நடவடிக்கைகளில் பூரண பங்கெடுத்து, அவற்றுடன் ஏற்கனவே உள்ள தொடர்பினை மேலும் வலுப்படுத்தி நிரந்தரமானதொன்றுக்கிக்கொள்ள இச் சஞ்சிகை உதவும்.

கமநல ஆராய்ச்சி பயிற்சி நிறுவகத்தின் காலாண்டு வெளியீடு.

## பொருளடக்கம்

| | பக்கம் |
|---|---|
| 1. வேளாண்மை பழமொழிகள் | 2 |
| 2. நமது நாட்டில் பசுவளர்ப்பு | 3 |
| 3. பாற்பண்ணைக் கூட்டுறவுச் சங்கம் | 10 |
| 4. மன்னம்பிட்டியிலும் —கலஹாவிலும் பசு வளர்ப்பு | 13 |
| 5. கமநல செய்திமுனை ... | 19 |
| 6. பாற்பண்ணைத் தொழில் நடத்தும் பெண்கள் | 21 |
| 7. எங்கள் நாட்டின் இறைச்சித்தொழில் | 25 |
| 8. மாட்டுத்தீனி மலிவுற வழி | 30 |

அட்டைப்படம்:

'முரு' எருமையிலிருந்து பால் கறக்கப்படுதலையும், கில்லாரி இனத் தனி எருதினைக் கொண்டு நிக்கவரட்டிய அரச பண்ணையில் நிலம் உழப்படுதலையும் முகப்புப் படம் சித்திரிக்கிறது.

புகைப்படம்: சாந்த விரசிங்க

விலை சதம்: -/75.
வருட சந்தா: ரூ. 2-00.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேளாண்மைப் பழமொழிகள்

## கன்று:

இளங்கன்று பயமறியாது.

கன்று கெட்டால் காணலாம் தாயருகே.

பாற்பசுவைக் கன்றிலே தெரியும்; பாக்கியவான் பிள்ளையை முகத்திலே தெரியும்.

முட்டி ஊட்டின கன்று முதற்கன்று.

கன்றைக்கண்டு ஓடிவரும் பசுவைப்போல.

விழித்தவன் கன்று நாகு கன்று; தூங்கினவன் கன்று காளைக் கன்று.

## காளை:

காளை பின்வாங்குவது பாய்ச்சலுக்கு அடையாளம்.

காளை போன வழியே கயிறு போகும்.

வல்லிலைக் கூறையும் மெல்லிலைக் காளையும் ஆகாது.

## மாடு:

அடியாத மாடு படியாது.

அக்கரை மாட்டுக்கு இக்கரை பச்சை.

கள்ள மாடு சந்தை ஏறுது.

காசைக்கொடுத்து குத்து மாடு தேடுவதா?

குருட்டு மாட்டைத் தெய்வம் காக்கும்.

கெட்ட மாட்டைத் தேடமுன்னே எட்டு மாடு தேடலாம்.

சூதன் கொல்லையில் மாடு மேயும்.

தென்றல் மாறி அடித்தால் மாட்டை விற்று ஆட்டை வாங்கு.

புது மாடு புல்லு பெறும்.

போர் மிதிக்கிற மாடு வைக்கோல் தின்னுதா?

(32 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது நாட்டில் பசு வளர்ப்பு

கமத்தொழிலுடன் இணைந்த தொழிலே பாற்பண்ணைத் தொழிலாகும். ஆடு, மாடு வளர்ப்பிலும், விருத்தியிலும் போதிய கவனம் செலுத்தாது பயிர்ச் செய்கையில் நாம் குறிப்பிடத் தக்க வெற்றி எதுவும் காண்பது கஷ்டம். பயிர்ச்செய்கையும் வீட்டுவிலங்கு வளர்ப்பும் ஒன்றுக்கொன்று துணையானவை. இதனாலேயே முன்னர் இந்தியாவில் வைஸ்ராயாக இருந்த ஒரு ஆங்கிலேயர், "பசுவும், நாள் முழுவதும் பொறுமையாக உழைக்கும் சோடி எருதுகளும் தங்கள் தோள்மீது இந்தியக் கமத் தொழிலின் முழு அமைப்பையுமே தாங்கி நிற்கின்றன" என பொருத்தமாகக் கூறி உள்ளார். எங்கள் நாட்டு மாடுகளையும் எருமைகளையும் கருத்தில் கொண்டால் அவரது கூற்று இன்றைக்கும் எங்களுக்குப் பொருந்துவனவாகவே இருக்கும்.

எங்கள் நாட்டின் மொத்தப் பரப்பு ஒரு கோடி 60 இலட்சம் ஏக்கர்களா



சண்டி திரித்துவ கல்லூரி ஆசிரியர் திரு. சின்னத்தம்பி

கும். இதில் 80 இலட்சம் ஏக்கர்களே பயிர்ச்செய்கைக்கு உகந்தவையாகும். எமது மக்கள் தொகை இன்று ஏறக்குறைய ஒரு கோடி 40 இலட்சத்தை எட்டி உள்ளது. இவ்வளவு பேரும் 80 இலட்சம் ஏக்கரில் கிடைக்கக் கூடிய விளைச்சலையே நம்பி உயிர்வாழவேண்டி ஏற்படுகிறது. பயிர்ச்செய்கைக் கும் விலங்கு வளர்ப்புக்கும் இடையே நல்லதொரு சமநிலையை ஏற்படுத்துவதாயின் பயிர்ச் செய்கைக்குரிய நிலப் பரப்பில் ஒரு பாகமேனும் வீட்டு விலங்கு வளர்ப்புக்கு ஒதுக்கப்பட வேண்டும்.

எங்கள் நாட்டில் இப்போதுள்ள வீட்டு விலங்கினங்களின் எண்ணிக்கையைக் கவனத்தில் கொள்வது நல்லது. ஏறத்தாழச் சொன்னால் 17½ இலட்சம் மாடுகள், 8½ இலட்சம் எருமைகள் 5½ இலட்சம் வெள்ளாடுகள் 36 ஆயிரம் பன்றிகள் 30 ஆயிரம் செம்மறி ஆடுகள் இன்று இந்நாட்டில் உயிர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்கின்றன. 10 வருடங்களுக்கு முன்னர், அதாவது 1966இல் இருந்த மாடுகள் எருமைகளின் எண்ணிக்கை போலவே 1976ம் ஆண்டிலும் இருந்துள்ளன. இதிலிருந்து இப்பத்து வருட காலத்திலும் ஏற்பட்ட இவ் விலங்கினங்களின் பெருக்கமும் பத்து வருடகால இடைவெளியிலே ஏற்பட்ட சாவுகளும் இறைச்சிக்காக வெட்டப் பட்ட எண்ணிக்கைகளும் சமமாக இருக்கின்றன என்றே கொள்ள வேண்டும்.

## குறிக்கோள்கள்:

பாற்பண்ணைத் தொழிலுக்குள்ள மூன்று முக்கிய குறிக்கோள்கள்:—

1. பால், இறைச்சி மற்றும் பாற் பொருட்கள் மூலம் மக்களுக்கு மிருகங்கள் வாயிலாகக் கிடைக் கும் புரதச் சத்தை வழங்குதல்;

2. கமத்தொழிலுக்கும் மற்றும் கமம் சார்ந்த கைத்தொழிலுக்கும் மாடு கள் எருமைகள் மூலமாக இழு வைச் சக்தியை வழங்குதல்.

3. சேதன பசளையையும் மற்றும் தோல், எலும்பு, இரத்தம்,கொம்பு, குளம்பு போன்ற விலங்கினம் தரும் உப பொருட்களையும் பெறு தல்.

கைத்தொழில் துறையில் முன்னேற் றம் கண்டுள்ள நாடுகளிலோ குறிப் பிட்ட இரண்டாவது காரணியான விலங்கு இழுவைச் சக்தி கைவிடப் பட்டதொன்றாகும். ஆயினும் அச்சக்தி எங்கள் நாட்டில் ஏற்ற தொழில் நுட் பங்களுக்கு இன்னும் பல காலம் பயன் படுத்தப்படும் என்பது திண்ணம்.

எமது மக்களது போசாக்குத் தரம் இன்னும் மிகக் குறைவாகவே உள் ளது. ஒருவரது ஆரோக்கியத்திற்கு அவசியமான ஒரு நாளைய உணவில் 65 கிராம் புரதம் அடங்கியிருக்கவேண் டும் எனச் சொல்லப்படுகிறது. இதில் குறைந்தது 20 கிராம், பால், முட்டை, இறைச்சி போன்றவற்றில் காணப் படும் விலங்குப் புரதமாகவும் இருத் தல் வேண்டும் என அறிவுறுத்துகிறார் கள். எங்கள் அண்டை நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் இங்கு ஒரு வர் உட்கொள்ளும் பாலின் விகிதம் மிகக் குறைவாக உள்ளது. பொருளா தாரத்தில் முன்னேற்றம் கண்டுள்ள நாடுகளைப் பற்றியோ பேசவேண்டிய தில்லை. நாளொன்றுக்கு குறைந்தது 5 அல்லது 6 அவுன்ஸ் பால் உட்கொள் வது சாலச்சிறந்ததாகும். ஆனால் தற் போது புள்ளிவிவர அடிப்படையில் பார்க்கும்போது இந்நாட்டில் ஒருவர் நாளொன்றுக்கு 2 அவுன்ஸ் பாலையே உட்கொள்ளுகிறார் எனச் சொல்லப்படு கிறது. ஆயினும் எங்களில் பலர் பாலை குடிக்காதவர்களாக இருக்கலாம். ஒரு வர் பருகும் விகிதமான இந்த 2 அவுன் சுகளில் ஒரு அவுன்ஸ் மாத்திரமே உள் நாட்டில் உற்பத்தி ஆகிறது. மற்றைய அவுன்சு பால் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி ஆகிறது என்பதையும் மன தில் கொள்ளவேண்டும்.

ஆண்டுதோறும் எங்கள் அரசு குறைந்தது ஒரு கோடி ரூபாவைப் பாலுக்கும் பாற்பொருள் உற்பத்திக் காகவும் செலவிட்டுக்கொண்டிருக் கிறது. எமது கமக்காரர்கள் தொன்று தொட்டு உழவுத்தொழிலுக்கோ சேறு அடிப்பதற்கோ சூடு மிதிப்பதற்கோ வயலுக்கு கமப்பொருட்களைக் கொண்டுசெல்லவோ, விளைபொருளை ஏற்றிவரவோ எருதுகளையும் எருமை களையும் பயன்படுத்திச் செய்யும் வேலை களை எல்லாம் இந்நாட்டில் இயந்திரங் களைக் கொண்டு செய்யலாம் எனச் சொல்லிவிட முடியாது. அப்படி ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திலே ஏற்பட்டாலும் கூட அதற்கும் இன்னும் எத்தனையோ ஆண்டுகள் பிடிக்கும் என்றே சொல்ல வேண்டும். குறிப்பாக சிறிய கமக்காரர்கள் இன்னும் பலகாலத்திற்கு மிருகங்களின் இழுவைச் சக்தியை நம்பியே கமம் செய்து கொண்டு இருப்பர். எங்கள் நாட்டின் பொருளாதார, கைத்தொழில் வளர்ச்சி நிலையைப் பின்னணியாக வைத்துப் பார்க்கும்போது மிருக இழுவைச் சக்தியைப் பொறுத்த வரையிற் கூட கமத்தொழில் பாற் பண்ணைத் தொழிலுடன் பின்னிப் பிணைந்துள்ளதென்பதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆனால் கண்மூடித் தனமான முறையிலும் திட்டம் அற்ற வகையிலும் இறைச்சிக்காக மிருகங்கள் வருடா வருடம் கொல்லப்பட்டு, மாடுகள் எருமைகளின் எண்ணிக்கை குறைந்து வருவதைப் பார்க்கும் போது, கமத்தொழிலின் எதிர்காலம் எப்படி அமையுமோ என அஞ்ச வேண்டியுள்ளது. இறைச்சி தொடர்பாக விரைவிலேயே ஒரு திட்டவட்டமான கொள்கையை வகுத்து நிறைவேற்றத் தொடங்குதல் இந்நாட்டின் கமத்தொழில் உற்பத்திக்கு உறுதுணையாக இருக்கும்.

பாற்பண்ணைத் தொழில் மூலமாகக் கிடைக்கும் விலை மதிப்புள்ள உப பொருட்கள் சாணிப்பசளை, தோல், இரத்தம், எலும்பு, பசைப்பொருள் ஆகியன ஆகும். ஒரு பசுவிலிருந்து நாள் ஒன்றுக்கு 30, 35 இறாத்தல் சாணம் பெற முடியும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த அடிப்படையில் ஒரு பசுவிலிருந்து ஆண்டு ஒன்றுக்கு 5, 6 தொன் சாணிப் பசளை பெற முடியும். சாணம், சலம், கழித்த புல், வைக்கோல் எல்லாவற்றையும் சேர்க்க முடிந்தால் ஒரு பசுவின் காரணமாக ஆண்டு ஒன்றுக்கு 10, 12 தொன் பசளை திரட்ட முடியும்.

நாள் ஒன்றுக்கு இந்நாட்டில் இறைச்சிக்காக ஏறத்தாழ 500 மாடுகள் கொல்லப்படுகின்றன. இவற்றை விட எருமை மாடுகள் கொல்லப்படுவதற்கு தற்போது தடை விதிக்கப்பட்டிருந்தும், அதிகாரிகள் எவ்வளவோ விழிப்பாக இருந்தும் நாளாந்தம் மாடுகளும் எருமை மாடுகளும் கணிசமான அளவில் இறைச்சிக்காகக் களவாகவும் கொல்லப்படுகின்றன. இதனை அத்தாட்சிப்படுத்துவதற்குக் குறிப்பாக ஒரு வருடத்தில் இறைச்சிக்காக கொல்லப்பட்ட மிருகங்களின் எண்ணிக்கையைக் கவனிப்போம்.

உதாரணமாக,1967ம் ஆண்டின்போது இரண்டு இலட்சத்துப் பதினேழாயிரம் மாடுகள் கொல்லப்பட்டதாகப் பதிவுகள் காட்டியபோதிலும், அவ்வாண்டில் இரண்டு இலட்சத்து நாற்பத்திநாலாயிரம் மாடுகள் கொல்லப்பட்டதாக மதிப்பிடப்படுகிறது. இவ்விரு எண்ணிக்கைக்கும் இடைப்பட்ட வித்தியாசம் 27 ஆயிரம். அந்த வருடத்தின் போது இறைச்சிக்காகக் களவாகக் கொல்லப்பட்ட மாடுகளின் எண்ணிக்கையையே இது காட்டுகிறது. அதே வருடத்தில் 51 ஆயிரம் எருமைகள் கொல்லப்பட்டதாகப் பதிவுகள் காட்டுகின்றன. ஆனால் உண்மையில் 83 ஆயிரம் எருமைகள் வரையில் கொல்லப்பட்டிருக்கும் என மதிப்பீடு செய்யப்படுகின்றது. இதிலிருந்து 32 ஆயிரம் எருமைகள் களவாகக் கொல்லப்பட்டிருக்கின்றன எனவும் புலப்படுகிறது. சங்கக்கடை விற்பனைக்கு வந்த தோல்களின் எண்ணிக்கையைக் கணித்தே இவ்வாறு மதிப்பீடு செய்யப்படுகிறது என்பதையும் இங்கு குறிப்பிடவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய போக்கு, அதாவது இறைச்சிக்காகக் கள்வல் மிருகங்கள் கொல்லப்படுதல் பிற்பட்ட வருடங்களில் குறைந்திருக்கும் எனக் கொள்வதற்கு எவ்வித காரணமும் இல்லை. இந்த போக்கு தொடர்ந்து நீடித்தால் எமது நாட்டில் அருஞ் செல்வமாகக் கருதப்படும் மந்தைகள் இனம் விரைவிலேயே அழிந்து விடும் என எதிர்பார்க்கலாம்.

இந்நாட்டிலுள்ள வளங்களை செம்மையாகப் பயன்படுத்தினால் பாற்பண்ணைத் தொழில் நடத்துவதற்கு நல்ல வாய்ப்புக்கள் இன்னமும் இருக்கின்றன. நிலம், நீர் வழங்கல், மழை வீழ்ச்சி, சுவாத்தியம் போன்ற பல அம்சங்கள் பாற்பண்ணைத் தொழிலுக்கு மிகச் சாதகமானவையாக விளங்குகின்றன. கம சுவாத்திய அடிப்படையில் எமது நாடு பாற்பண்ணைத் தொழிலுக்கு உகந்த 3 பாரிய பிரிவுகளாகப் பிரிக்கப்படலாம். அவை: தேயிலை வளரும் பிரதேசம், தெங்கு முக்கோணம், மகாவலி நதிபாயும் பிரதேசமான தமன்கடுவ என்னும் களிமுக நிலப்பிரதேசம் ஆகியன ஆகும். இப்பகுதிகளை புவியியல் அடிப்படையில்: மலைநாடு, மத்தியமலை நாடு, கீழ் நாடு எனவும் அழைக்கலாம். கடல் மட்டத்திலிருந்து நாலாயிரம் அடிக்கு மேற்பட்ட பகுதி பாற்பண்ணைத் தொழிலைப் பொறுத்த வரையில் மலைநாடு எனக்கொள்ளப்படுகிறது. இப்பகுதியினுள்ளே நுவரெலியா, அப்பேவெல மற்றும் அப்புத்தளை, வெலிமடை, பதுளை, பண்டாரவளை ஆகிய இடங்களைச் சூழவுள்ள பகுதிகளும் அடங்குகின்றன. 1500 அடிக்கு மேற்படவும் 4000 அடிக்குக் கீழ்ப்படவும் உள்ள பகுதியை மத்திய மலைநாடு என்கிறார்கள். இப்பகுதியின் உள்ளே ஹற்றன், தலவாக்கொல்லை, நாவலப்பிட்டி, கண்டி, கம்பளை, பண்டாரவளை ஆகியன அடங்குகின்றன. 1500 அடிக்குக் கீழ்ப்பட்ட பகுதி கீழ் நாடு எனக் கொள்ளப்படுகிறது. இப்பகுதியினுள் கொழும்பு, களுத்துறை, நீர்கொழும்பு, குருநாகலை, இரத்தினபுரி, அவிசாவளை போன்ற இடங்கள் வருகின்றன. வருடாந்த மழை வீழ்ச்சி அடிப்படையில் இம்மூன்று பிரதேசங்களும் ஈரவலயத்திலுள்ளோ அல்லது உலர்வலயத்திலுள்ளோ வரும். பொதுவாக மலைநாட்டின் ஈர வலயப் பகுதி வருடாந்தம் 75 அங்குலத்திற்குக் குறைவான மழையையும் மத்திய மலைநாட்டின் 2 வலயங்களும் வருடாந்தம் 70—80 அங்குல மழையையும் பெறுகின்றன.

கீழ் நாடு 50—70 அங்குல மழையைப் பெறுகிறது. எங்கள் பால் உற்பத்தியில் ஏறக்குறைய 42 சதவீதம் தேயிலை வளரும் முக்கோணத்திலும் 27 சதவீதம் தெங்கு முக்கோணத்திலும், மிகுதி 35 சதவீதம் பொலநறுவை, வவுனியா, யாழ்ப்பாணம் மற்றும் பகுதிகளிலிருந்தும் கிடைக்கின்றது.

தேயிலை முக்கோணமும் தெங்கு முக்கோணமும் நாட்டின் பயிர்ச்செய்கை பண்ணக்கூடிய மொத்த நிலப்பரப்பில் மூன்றில் ஒரு (1/3) பங்காகும். இம் மூன்றில் ஒரு பகுதி, தேசிய பால் உற்பத்தியில் 2/3 பங்குக்குப் பொறுப்பு வகிக்கிறது என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும்.

கடந்த பல நூற்றாண்டுகளாக எமது மக்கள் பாற்பண்ணைத் தொழிலிலும் போதிய கவனம் செலுத்தி வந்துள்ளார்கள். ஆயினும் கடந்த காலத்தில் பாற்பண்ணைத் தொழிலுக்கு உரிய முக்கியத்துவம் தரப்பட்டிருக்கிறது எனச் சொல்ல முடியாது. பாற்சபை நிறுவப்பட்டதுடன் பாற்பண்ணைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலே அபிவிருத்தி செய்ய வேண்டும் என்றதொரு ஆர்வமும் எண்ணமும் பொதுவாக மக்களிடையே ஏற்பட்டிருக்கிறது. பலவகைப்பட்ட இடைஞ்சல்கள் இருந்த போதிலும், ஏறக்குறைய 20 வருடங்களுக்கு முன்னரிலும் பார்க்க இன்று பாற்பண்ணை உற்பத்தியாளர்கள் அவர்களது பாலையும் மற்றும் பால் உற்பத்திகளையும் கூடுதலான விலைக்கு விற்கக்கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றன. பாற்பண்ணைத் துறையில் சாதிக்கப்படுவதற்கு இன்னும் எத்தனையோ விடயங்கள் இருந்த போதிலும் நாம் நம்பிக்கையுடன் முன்னேறுவதற்கு நல்ல ஆரம்பம் ஏற்பட்டுள்ளதென்பதை மறுக்க முடியாது. இந்த நாட்டிலே படிப்படியாக பால் உற்பத்தி அதிகரித்து வருவதினால் பால் மாவினதும், பால் உற்பத்திகளினதும் இறக்குமதி கணிசமாகக் குறைந்து வருகிறது என்பதையும் நாம் காணலாம். இத்தகைய ஒரு நிலை ஏற்பட்டிருப்பதனால் எமது நாடு பாற் தேவையில் தன்னிறைவு காணுதல் ஒரு நீண்டகாலக் கனவாக இருக்காது.

கொழும்பில் நிறுவப்பட்டிருக்கும் பாஸ்டர் முறையில் பதப்படுத்தும் பாற் தொழிற்சாலை, பல்லேகலையில் அமைந்துள்ள கிருமி யகற்றிய பாற் தொழிற்சாலை, பொலநறுவையில் உள்ள கட்டிப்பால் தொழிற்சாலை, அம்பேவெலையிலுள்ள பால்மா தொழிற்சாலை, மற்றும் நாட்டின் பல பாகங்களிலும் அமைக்கப்பட்டுள்ள பால் சேகரிப்பு நிலையங்கள் ஆகியன அனைத்தும் பாலையும் பால் பொருட்களையும் பதப்படுத்துவதற்கான ஒரு பூரண அமைப்பை நாட்டிலே ஏற்படுத்தி உள்ளன.

## முக்கிய காரணங்கள்:

எமது நாட்டில் பாற்பண்ணைத் தொழில் வெற்றிகரமாக நடைபெறச் செய்தல் மூன்று முக்கிய காரணங்களில் தங்கி உள்ளது. அவை:

(1) உள்நாட்டுப் பசு இனங்களின் தரத்தை படிப்படியாக உயர்த்துதல் உட்பட நல்ல பால் இனப் பசுக்களின் எண்ணிக்கையைப் பெருக்குதல்.

(2) உயர்வகைப் புல் இனங்களையும் புல் நிலங்களையும் விருத்தி செய்தல்.

(3) பாற்பண்ணைத் தொழிலில் செம்மையான முகாமை முறையினை மேற்கொள்ளுதல். அதாவது பாற்பண்ணைத் தொழிலை முறை தெரிந்து நடத்துதல்.

இப்போது ஏறக்குறைய 17½ இலட்சம் மாடுகள் இருப்பதாகவும், இவற்றுள் 3½ இலட்சம் பாற் பசுக்கள் எனவும், 8½ இலட்சம் ஆக உள்ள எருமைகளுள் ஏறக்குறைய ஒரு இலட்சம் பால் தரும் எருமைகளாக இருப்பதாகவும் மதிப்பிடப்படுகிறது. ஆயினும் உள்நாட்டுப் பால் மாடு, எருமை இனங்கள் பால் உற்பத்திக்கு அவ்வளவு பெயர் பெற்றவை அல்ல. சாதாரணமாக இத்தகைய இனப்பசுக்களிலிருந்து நாளாந்தம் சராசரியாக 2, 3 பைந்து பாலுக்கு மேல் கிடைப்பதில்லை. எங்கள் பசுக்களின் உற்பத்திச் சக்தி குறைவாக இருக்கும் காரணத்தால் அதிகம் பால் தரக்கூடிய உயர்ந்த இனப்பசு இனங்களை அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, இங்கிலாந்து, ஒல்லாந்து, டென்மார்க் போன்ற சீதள வலய பிரதேச நாடுகளிலிருந்தும், எமது அண்டை நாடான இந்தியாவிலிருந்தும் இறக்குமதி செய்ய வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

இந்நாட்டில் இப்போதுள்ள சீதள வலயத்துப் பாற்பசுக்களில் பெரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலானவை பிறேசியன், ஆசயர், ஜேர்சி ஆகிய இனங்களாகும். எமமலை நாட்டு சுவாத்தியம் இம்மிருகங்களுக்கு உகந்தனவையாக இருப்பதால் இவற்றில் பெரும்பாலானவை அப்பகுதியிலேயே வளர்க்கப்படுகின்றன. இவற்றை விடத் தேயிலைத்தோட்டச் சொந்தக்காரர் பல வருடங்களுக்கு முன் தங்களின் பாற்தேவைக்காக கொண்டுவந்து வளர்த்த பசுக்களின் பரம்பரையும் இருக்கின்றது. இவை ஏற்கனவே இந்நாட்டின் சுவாத்தியத்திற்கு பரீட்சயமாகி வளர்ந்து வருவனவாகும். இவை பொதுவாக 'ஹற்றன்' பசுக்கள் அல்லது 'கேப்பை' மாடுகள் என்றும் அழைக்கப்படுகின்றன. தென் ஆபிரிக்காவிலுள்ள நன்நம்பிக்கை முனை (கேப் ஒவ் குட் கோப்) என்ற இடத்திலிருந்து முதன் முதலாக இப்பசு இனங்கள் இங்கு கொண்டு வரப்பட்டமையால் ஒருவேளை இப்படி பெயர் வந்திருக்கலாம். இந்திய இனப் பசுக்களில் சாகிவால், சிவப்புசிந்தி; தர்பர்கார் அல்லது வெள்ளை சிந்தி, ஹரியானா ஆகிய இனப்பசுக்கள் இங்கு கொண்டு வரப்பட்டுள்ளன. இந்திய இனப்பசுக்களும், சிதள வலய, இந்திய, கலப்பு இனப்பசுக்களும் தெங்கு முக்கோணத்திலும் ஏனைய வரண்ட வலயப் பகுதிகளிலும் வளர்க்கப்படுவதற்கு ஏற்றவையாக உள்ளன. பசு இனங்களைத் தவிர பால் எருமை இனங்களும் இந்தியாவில் இருந்து கொண்டு வரப்படுகின்றன. முறா, சூர்த்தி ஆகிய இரண்டு இன எருமைகளே பிரதானமாக இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்டுள்ளன.

சிறந்த பசு இனங்களை இந்நாட்டிலே விருத்தி செய்வதை முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாகக் கொண்ட அரசு, நாட்டின் பல பாகங்களிலும் பல பாற்பசுப் பண்ணைகளைத் திறந்துள்ளது. இத்தகைய பண்ணைகள் நான்கு மலைநாட்டில் அமைந்துள்ளன. அவை அம்பேவெல பண்ணை, நியூசிலாந்து பண்ணை, தியகம பண்ணை, போபத்தலாவை பண்ணை ஆகியனவாகும். கேகாலை மாவட்டத்தில் உந்துகொட பண்ணை நிறுவப்பட்டுள்ளது. தமன்கடுவை பிரதேசத்தில் கந்தகாடுவ, பொலநறுவை, கொட்டலீய, கிரிகோணமடுவ ஆகிய இடங்களில் 4 பண்ணைகளும், நிக்கவெரட்டிய, நிநியகம, வீரவில, கரகொட—உயங்கொட, பெல்வெஹெர ஆகிய இடங்களில் அமைந்துள்ள பண்ணைகளும், கீழ் நாட்டுப் பிரதேசங்களுக்கு உதவியாக அமைந்துள்ளன.

இவற்றுள் முதலாவது பண்ணை 1938 ஆம் ஆண்டு பொலநறுவை மாவட்டத்திலிருக்கும் தமன்கடுவைப் பிரதேசத்தில் நிறுவப்பட்டது. இரண்டாவது உலக யுத்தத்தின்போது மலைநாட்டில் தங்கியிருந்த பட்டாளத்தினருக்குத் தேவைப்பட்ட பால் வழங்குவதற்காக அம்பேவெலையில் இப்பொழுது இருக்கும் பாற்பண்ணை நிறுவப்பட்டது.

இப்பாற்பண்ணை எல்லாவற்றிலிருந்தும் கடந்த 7 வருடங்களுக்கு இடையில் அதாவது 1970க்கும் 77க்கும் இடையில் பசுக்கன்றுகள், வண்டி இழுப்பதற்கும் கமவேலைகளுக்குப் பயன்படுத்தற்கும், இனப் பெருக்கத்துக்குமான காளைக்கன்றுகள் ஆகியன மொத்தம் 16 ஆயிரம், பொது மக்களுக்கு விற்கப்பட்டுள்ளன. பாற்பண்ணை தொடர்பாக ஆய்வுகள் நடத்துதல், பால் உற்பத்தி செய்தல், பல்வேறு நிலைகளில் பால் உற்பத்தியாளர்களுக்குப் பயிற்சி அளித்தல் ஆகியன இத்தகைய பாற்பண்ணைகளை வைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்துவதற்கான மற்றைய குறிக்கோள்களாகும்.

நல்ல பால் இனப்பசுக்களை விருத்தி செய்வதற்கும், புற்செய்கை ஏற்படுத்துவதற்கும் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படாத வரையில் பாற்பண்ணைத் தொழில் சிறந்து வளர முடியாது. போசாக்கு அற்ற புற்களைக் கொண்டும், களைகளைக் கொண்டும் பாற்பசுக்களை நன்கு வளர்க்கலாம் என நினைப்பது கண்மூடித்தனமானதாகும். எங்கள் பாற்பண்ணை உற்பத்தியாளர்கள் பலர், நல்ல இனப்புற்களும் பயிர் தாம் என்பதை இன்னமும் போதிய அளவில் உணரவில்லை. இத்தகைய நல்ல இனப்புற்களை சிறந்த முறையில் விருத்தி செய்வதால் பால் உற்பத்தியைச் சுலபமாக அதிகரிக்கலாம்.

பிண்ணுக்கு, மற்றும் கலவைத் தீன்கள் போன்ற பசுவின் உணவுகளின் விலைகள் கூடிக்கொண்டிருப்பதனால் பாற்பண்ணை உற்பத்தியாளர்களுக்கு அத்தொழிலில் ஊக்கம் குறைந்து விடுகிறது. இந்நிலையை மாற்றுவதற்கு ஒரு வழி, பசுத் தீன்களின் விலைகளை எப்பொழுதும் நிலையாக இருக்கச் செய்தலாகும். அப்படிச் செய்தாலேயே பாற்பண்ணை உற்பத்தியாளர்கள் தங்கள் முயற்சியின் மூலம் ஒரு ஸ்திரமான விலையைப் பெற முடியும்.

இன்று எமது நாட்டிலே 20 லெட்சத்திற்கு மேற்பட்ட சிறிய கமக்காரர்கள் இருக்கின்றனர். அவர்களுக்கு ஆகக்கூடியது 1 அல்லது 2 பசுக்களே சொந்தமாக உள்ளன. இந்த 20 லெட்சம் கமக்காரர்களே இந்நாட்டின் மொத்த பால் உற்பத்தியில் 90 சதவீதத்தை வழங்குகிறார்கள் என்றால் அது பிழை அல்ல.

நெல் விளைவிக்கும் கமக்காரர்களுக்கு சில சலுகைகளை அரசு வழங்கியுள்ளது. அதேபோல் பாற்பண்ணை உற்பத்தியாளருக்கும் சில உத்தரவாத விலைகள், தூண்டுதல்கள், பாதுகாப்புக்கள் தரப்படவேண்டும். அப்போதுதான் பல பண்ணைக்காரர்களும் மனம் வைத்து அத்தொழிலை விருத்தி செய்வார்கள்.

ஆனால் சிறு அளவில் பாற்பண்ணைத் தொழிலில் ஈடுபட்டுள்ளோர் பலருக்கு இத்தொழில் பற்றிய விஞ்ஞானரீதியான அறிவு பெரிதும் இல்லை என்றே சொல்லவேண்டும். எதிர்காலத்தில் பாற்பண்ணைத் தொழில் வளர்ச்சி பெறுதற்கு இதில் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் பல கட்டங்களில் போதனையும் பயிற்சியும் அளித்தால் நல்ல பலன் கிடைக்கும்.

பாற்பண்ணையைத் தனியே ஒரு தொழிலாகச் செய்பவர்களுக்கும் மற்றைய முயற்சிகளுடன் அதனையும் ஒரு தொழிலாகச் செய்பவர்களுக்கும் புல் வளர்ப்பதற்கு போதிய நிலம் இல்லாதிருத்தலும், மேயக் கூடிய பசுக்களுக்கு தக்க மேய்ச்சல் தரை இல்லாதிருப்பதும் பெரும் இடைஞ்சலாக உள்ளது. பாரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்படும் போது புல் நில அபிவிருத்திக்கும் உரிய முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும்.

நன்கு யோசித்து வகுத்த ஒரு திட்டத்திற்கும் குறிக்கோளுக்கும் அமைய எமது நாட்டின் மனித வளமும் இயற்கை வளங்களும், மிருக வளங்களும் சீரான முறையில் ஒன்று சேர்க்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டால், இந்நாட்டின் பாற்பண்ணைத் தொழிலுக்கு நல்ல எதிர்காலம் காத்திருக்கிறது என்பதை எவருமே மறுக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாற் பண்ணைக் கூட்டுறவுச் சங்கம்

எங்கள் நாட்டில் பாற்பண்ணைத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு பலவித சிக்கல்களும் சிரமங்களும் இருப்பதாக முறைப்படுகிறார்கள். பாற்பண்ணை உற்பத்தியாளர்கள் தனித்தனியாகக் குரல் எழுப்பி அவர்களது கஷ்டங்களை போக்குவது சுலபம் அல்ல. அவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு கூட்டுறவு இயக்கமாக செயல்படும்போது அவர்களுக்கு ஒரு சக்தி ஏற்பட்டு பல சிக்கல்களுக்குத் தீர்வு காணும் வலிவு உண்டாகிறது. அடம்பன் கொடி ஒன்று திரண்டால் அதற்கும் ஒரு மிடுக்கு ஏற்படுகிறது என்பார்களே, அப்படி.

சில முக்கிய காரணிகளை அடிப்படையாகக் கொண்டே பாற்பண்ணை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களும் வெற்றிகரமாகச் செயற்பட முடியும். உறுப்பினர்களது அயரா உழைப்பும் நேர்மையும், தலைமை தாங்குபவர்களது நேர்மையும் ஆர்வமும் திறமையும் வலிமையும், வெற்றி காணவேண்டும் என்பதிலுள்ள ஊக்கமும் இத்தகைய முக்கிய காரணிகளுள் சிலவாகும்.

எங்கள் பக்கத்து நாடான இந்தியாவில் சில ஆண்டுகளுக்கு முன்னர் பாற்பண்ணை உற்பத்தியாளர்கள் பலர் பலதரப்பட்ட கஷ்டங்களை எதிர்நோக்க வேண்டியிருந்தனர். அவர்களுள் குஜராத் மாநிலத்தைச் சேர்ந்த சில பாற்பண்ணை உற்பத்தியாளர்கள், முது பெரும் அரசியல் ஞானிகளுள் ஒருவராகத் திகழ்ந்த வல்லபாய் பட்டேல் அவர்களை 1945 இல் ஒரு முறை சந்தித்துத் தங்களுக்குள்ள பிரச்சினைகளைச் சொல்லி ஆலோசனை கேட்டார்கள். அவர் சொன்ன ஒரே ஒரு யோசனை இதுதான்: 'ஒரு கூட்டுறவு இயக்கத்தை அமைத்து அதில் உறுப்பினராகச் சேர்ந்துகொண்டு, மேலும் உங்கள் பாற்பண்ணைத் தொழிலின் நலன்களுக்காகப் போராடுங்கள். வெற்றி நிச்சயம்' என்று சொல்லி அனுப்பினார். அத்தலைவரிடம் ஆலோசனை கேட்டுச் சென்ற பாற்பண்ணைக்காரர்களும் தங்களுக்கென ஒரு கூட்டுறவுப் பாற்சங்கத்தை அமைத்துக் கொண்டனர். அன்று ஒரு சிறிய அளவில் அமைந்த கூட்டுறவுச் சங்கம் இன்றோ?

பாற்பண்ணை உற்பத்தியாளர் சிலர் தங்களுக்கு என ஒரு கூட்டுறவு இயக்கத்தை அமைத்துச் செயல்படத் தொடங்கியதும் அது ஆலமரம் போல வளர்ந்து, அகில இந்தியாவிலும் பரந்து, கிராமப் புறங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிய பாற்பண்ணை வைத்திருப்போர் பலரும்கூட இது எனது சங்கம் என பெருமைப்படக் கூடிய அளவுக்கு சக்தி பெற்றது.

குஜராத் மாநிலத்தில் உள்ள ஒரு மாவட்டத்திற்குப் பெயரே 'கைரா'. இம் மாவட்டத்திலேயே வெற்றிகரமாக இயங்கும் கூட்டுறவுப் பாற்சங்கம் முதன்முதலாக அமைக்கப்பட்டது. எனவே இதற்கு கைரா 'கூட்டுறவுப் பாற்சங்கம்' எனப் பெயர் வந்தது. இச்சங்கம் கைரா மாவட்டத்திலுள்ள ஆனந்த நகரில் அமைந்துள்ளது. இதில் 783 கிராம பாற் கூட்டுறவுச் சங்கங்கள் உறுப்பினராக உள்ளன. எல்லாமாக மொத்தம் 2 இலட்சத்து 25 ஆயிரம் குடும்பங்கள் இவற்றில் உறுப்புரிமை பெற்றுள்ளன. 17 ஆண்டுகளுக்கு முன்னர் பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கான வெண்மைப்புரட்சி ஒன்று தொடக்கி வைக்கப்பட்டதுடன், பால் உற்பத்தியை அதிகரிக்கும் திட்டம் ஒன்றையும் நிறைவேற்றத் தொடங்கினர்கள். கைரா பால் உற்பத்தியாளர் யூனியனைப் போன்று மேலும் ஆறு யூனியன்கள் இந்திய நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் வெற்றிகரமாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. இவற்றின் பயனாக நாளொன்றுக்கு 30 லட்சம் லீற்றர் பால் திரட்டப்படுகிறது. உள்நாட்டில் பால் உற்பத்தி பெருகி வருகிறது. கைரா யூனியனைப் போன்று பாற்கூட்டுறவுச் சங்கங்கள் பலவற்றை மேலும் சில பகுதிகளில் அமைக்க முனைந்து வருகிறார்கள். அந்நாட்டில் சென்ற வருட முடிவு வரை 5000 பால் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகவும், இவற்றில் 5 இலட்சம் பாற்பண்ணை உற்பத்தியாளர்கள் உறுப்பினராக இருப்பதாகவும், அவர்களுள் 60 சதவீதத்திற்கு மேற்பட்டோர் சிறிய கமக்காரர்களாகவும் காணியற்ற தொழிலாளிகளாகவும் இருப்பதாக அறிகிறோம். ஆகக்கூடியது 5 ஏக்கர் நிலத்திற்குக் குறைவாகக் கொண்டிருப்பவர்களே அங்கு சிறிய கமக்காரர்களாகக் கருதப்படுகிறார்கள். இந்தகையோரது குடும்ப வருமானத்தில் முக்கால்பங்கு, பாற் பசுக்களின் மூலமாகக் கிடைக்கிறதாம். கூட்டுறவு அமைப்பின் மூலம் பால் உற்பத்தியையும் கிராமத்திலுள்ள கமக்காரர்கள் தங்களது கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்ள முடிவதனால், அவர்கள் நகர்ப்புறத்திலுள்ள பணம் படைத்தவர்களால் சுரண்டப்பட முடிவதில்லை.

கூட்டுறவுப் பாற்சங்கத்தின் அமைப்பு முறையே அதன் வெற்றிக்குப் பெரிதும் காரணமாக இருக்கிறது. அதன் அமைப்பு கிராம மட்டத்திலிருந்து கட்டி எழுப்பப்பட்டிருக்கிறது. கிராமத்திலுள்ள கூட்டுறவுப் பாற்சங்கம் முக்கிய சில அலுவல்களை கவனித்தற்கு 4 ஊழியரை சம்பளத்திற்கு வைத்திருக்கிறது. அவர்களை பால் சேகரிப்பதற்கும் கணக்கு வைத்திருப்பதற்கும், பசு வளர்ப்போருக்குப் பணம் வழங்குவதற்கும் பாற் பசுக்களுக்கு வழங்கப்படும் வைத்திய சேவைகள் பற்றிய பதிவேடுகளை வைத்திருப்பதற்கும் பொறுப்பாக இருப்பார்கள். அதற்கு அடுத்தாற்போல் இருப்பது மாநில பால் கூட்டுறவுச் சங்கமாகும். இதில் இம்மாவட்டத்துக் கிராமக் கூட்டுறவுப் பாற்சங்கங்கள் யாவும் உறுப்பினராக இருக்கும். மாவட்ட கூட்டுறவு பாற்சங்கம் பாலை வாகனங்களில் எடுத்துச் செல்வதற்கும், பால் சுத்திகரிப்பு, பாற்பொருள் தொழிற்சாலைகளை நடத்துவதற்கும், பசுக்களுக்கு அவசியமான அடர்த்தீனி, கனிஜ கலவைகள் தயாரிக்கும் தொழிற்சாலைகளை நிருவகிப்பதற்கும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல இனப்புற்களை விருத்தி செய்வதற்கு வேண்டிய விதைகளையும் நறுக்குகளையும் பாற்பசு வளர்ப்போருக்கு வழங்குதற்கும் பொறுப்பாக இருக்கும்.

"கூட்டுறவு அடிப்படையில் பாற்பண்ணை அபிவிருத்தி செய்தல் தனியொரு பொருளுக்கு நகர்ப்புறங்களில் பணம் படைத்தவர்கள் வகுக்கும் நியதிகளுக்கு அகப்படாது தன் நியதிகளின்படி தனது உற்பத்தியை விலைப்படுத்த உதவுகிறது" என இந்தியாவின் பாற்பண்ணை அபிவிருத்திச் சபைத் தலைவர் டாக்டர் வி. குறியன் தெரிவித்துள்ளார்.

எமது நாட்டில் பாற்பசு வளர்ப்போரும் தமக்கெனக் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்துக்கொண்டு செயல்படத் தொடங்கினால் பாற்பண்ணைத் தொழில் துரிதமாக வளர்ச்சிபெறும் என்பதில் எவ்வித சந்தேகமும் இருக்க முடியாது. ஆகவே பாற்பசு வளர்ப்போர் கூட்டுறவு அமைப்பின் மூலம் தமது தொழிலை விருத்தி செய்ய முன்வர வேண்டும்.

## வாசகர் வட்டம்

"கமநலம்" தாங்கிவரும் கட்டுரைகளைப் பற்றி வாசகர்கள் தங்கள் கருத்துக்களை ஒளிவு மறைவின்றி எங்களுக்கு எழுத வேண்டும் என எதிர்பார்க்கிறோம்.

கமத்துறையில் உங்களுக்குள்ள சிக்கல்கள், சிரமங்கள் பற்றியும் எழுதுங்கள். கமத்தில் உங்கள் சாதனைகள் என்ன, உங்களுக்கு ஏற்பட்ட வேதனைகள் என்ன என்றும் குறிப்பிடுங்கள். கமச் செய்கையின்போது கூட எத்தனையோ சுவையான அனுபவங்கள் உங்களுக்கு ஏற்பட்டிருக்கலாம். அவற்றைப் பற்றியும் எழுதுங்கள். கமத்துறையின் பல அம்சங்கள் பற்றிய கட்டுரைகள், கவிதைகள் போன்றவற்றையும் வரவேற்கிறோம்.

நீங்கள் எழுதுபவற்றை வாசிக்க கமக்காரர்கள் விரும்புவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No............

## ஓர் ஒப்பு நோக்கு

# மன்னம்பிட்டியிலும்—கல்ஹராவிலும் பசு வளர்ப்பு

பசு வளர்ப்பைப் பற்றியும், பசு வளர்ப்போரைப் பற்றியும் நேரிலே சில தகவல்களைக் கண்டறிதற்காக இரண்டு இடங்களைத் தேர்ந்தெடுத்தோம். அவற்றுள் ஒன்று மன்னம்பிட்டி. பொலநறுவை மாவட்டத்தினுள் அமைந்துள்ள மன்னம்பிட்டி பொலநறுவைப் பட்டணத்திலிருந்து எட்டு மைல்களுக்கு அப்பால் பொலநறுவை—மட்டக்களப்பு வீதியில் உள்ளது. மலைநாட்டின் பல பாகங்களிலும் ஊற்றெடுத்து ஓடிவரும் பல சேய் நதிகளைக் கொண்ட தாய் நதியான மகாவலிகங்கை மன்னம்பிட்டி ஊடாகவே ஓடிக்கொண்டிருக்கிறது. மன்னம்பிட்டிப் பகுதி சமதரைப் பிரதேசம். ஆகவே மகாவலிகங்கையில் வெள்ளப் பெருக்கு ஏற்படும் போதெல்லாம் மன்னம்பிட்டியைச் சூழவுள்ள பிரதேசம் பொதுவாக வெள்ளத்தில் மூழ்குவது சர்வசாதாரணம். இப்பகுதிகளில் ஆற்று வண்டல் சேர்வதனாலும், மண்ணில் நீர்ச்செறிவு இருப்பதனாலும், போதிய வெய்யில் இருப்பதனாலும் மந்தைகளுக்கு உகந்த புல் செழித்து வளர வாய்ப்பிருக்கிறது.

இக் காரணங்களை மனதில்வைத்தே அரசும் பல ஆண்டுகளுக்கு முன்னரே இபபகுதியில் ஒரு பெரிய பாற்பண்ணையை நிறுவியது. அத்துடன், அப் பகுதியில் கிடைக்கும் பால் வளத்தைத் தக்கவாறு பயன்படுத்துதற்காகக் கட்டிப்பால் தொழிற்சாலை ஒன்றையும் பாற்சபை அண்மையில் நிறுவியது. இவை பற்றிய விவரங்களை ஏனைய கட்டுரைகளில் வாசிப்பீர்கள்.

மன்னம்பிட்டியில் தனிப்பட்ட கமக்காரர்கள் எப்படிப்பட்ட சூழ்நிலையில் பசு வளர்க்கிறார்கள் என்பதையும், அவர்கள் நிலையை அறியவும் முனைந்தோம். இதற்காகச் சிலரை அவர்களது பசுத்தொழுவங்களிலும், பால் சேகரிப்பு நிலையத்திலும் போய்ச் சந்தித்தோம்.

மன்னம்பிட்டியில் பாற்சபை பால் சேகரிக்கும் நிலையம் ஒன்றை இரண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடங்களுக்கு முன்னர் நிறுவியது. இந்நிலையத்துக்கு மன்னம்பிட்டி, சொறிவில்லு, புதுவெளி, கட்டாமுனை, கறப்புலை, யக்குறை, அல்லவெவ ஆகிய பகுதிகளில் வாழும் கமக்காரர்கள் பால் கொண்டு வந்து வார்க்கின்றனர். சிலர் தனியே பசுப்பாலை வார்க்கிறார்கள். மற்றும் சிலர் தனியே எருமைப்பாலை வார்க்கிறார்கள். வேறு சிலர் எருமைப்பாலையும் பசுப்பாலையும் கலந்து வார்க்கிறார்கள் எனவும் தெரிய வந்தோம். நல்ல விலையைப் பெறுவதற்காக இப்படிக் கலக்குகிறார்கள் என அறிந்தோம். பால் சேகரிப்பு நிலையம் 7 சதவீத கொழுப்புள்ள எருமைப் பாலை லீற்றர் ரூ. 2.80 படியும் 6 சதவீத கொழுப்புள்ள எருமைப்பாலை ரூ. 2.40 படியும் வாங்குகிறது. பசுப் பாலில் 3.5 சதவீதக் கொழுப்பு இருந்தால் லீற்றருக்குப் பாற்சபை ரூ. 1-52 விலை கொடுக்கிறது. மன்னம்பிட்டிக் கமக்காரரில் அநேகர் 2.40 விலைக்கே பாற்சபைக்குப் பால் விற்றுள்ளனர்.

மன்னம்பிட்டியில் பாற்பண்ணைக் காரர்கள் சிலரைச் சந்தித்தோம். இவர்களைப் பாற்பண்ணைக்காரர்கள் என்பதிலும் பார்க்க மாட்டு மந்தைச் சொந்தக்காரர்கள் என்றால் அதிக பொருத்தமாக இருக்கும். ஏனெனில் மாட்டு மந்தைகளை வைத்திருப்பதிலேயே அவர்கள் பெருமை கொள்கிறார்கள். அர்களது சமூக அந்தஸ்து அவர்களிடமுள்ள மந்தையின் அளவைப் பொறுத்துள்ளது. பாற்சபை ஒரு பால் சேகரிப்பு நிலையத்தை நிறுவியிருப்பதால் ஏதோ ஒரு துணை வருமானமாக இருக்கட்டுமே என்று நினைக்கக் கிடைக்கக் கூடிய பாலை வாங்கிவருகிறார்களே தவிர, முறையாகப் பால் மாடுகளை வளர்க்கவேண்டும், பாலைக்கறந்து விற்று வருவாய் தேடவேண்டும் என்ற ஆர்வம் அவர்களுக்கு முழுமையாக ஏற்பட்டுள்ளது என்று சொல்லிவிட முடியாது. ஆனால் சொந்தமாக மாடு வைத்திருக்க வழியில்லாதவர்கள், அடுத்தவர்களின் மந்தையைப் பராமரித்துப் பால் கறந்து விற்றுச் சீவியம் நடத்துவதில் அக்கறை கொண்டுள்ளார்கள். இப்படிப் பட்டவர்கள் அடுத்தவர்களின் மாட்டைப் பராமரித்து முதல் ஈற்றுப்பாலையும் கன்றையும் பராமரிப்புக் கூலியாக எடுத்துக் கொள்கிறார்கள். பிறகு இரண்டாம் ஈற்று வரை பசுவைப் பராமரித்துத் தாயையும் கன்றையும் உடையவருக்குக் கொடுத்து விடுகிறார்கள் இது இவ்வூர் வழமை.

மன்னம்பிட்டியில் ஒரு சுறுசுறுப்பான மாட்டு மந்தைச் சொந்தக்காரரைச் சந்தித்தோம். அவரைச் சோமசூரியப் போடியார் என்கிறார்கள். அவருக்கு அறுபது வயதுவரை இருக்கும். இருநூற்றைம்பது மாடுகள் வரையில் அவரது மந்தையில் உள்ளன. எல்லாமே நாட்டு மாடுகள்தான். இவற்றுள் 30 மாடுகள் வரையில் பாற்பசுக்கள். மந்தையைவிட அவருக்கு 15 ஏக்கர் வயல் நிலமும் 5 ஏக்கர் மேட்டு நிலமும் சொந்தமாக உள்ளன. மாட்டு மந்தையை அவரது ஆறு மகன்மாருள் ஒருவரான பதினொரு வயதான பாக்கியராஜாவே கவனிக்கிறார். அவர் பொறுப்பு ஏற்பதற்கு முன்னர் அவரது தமையன் மந்தையைப் பராமரித்தார். அவருக்குக் கட்டிடப் பொருட்கூட்டுத்தாபனச் சாலையில் ஒரு வேலை கிடைத்ததால், அவர் வகுப்பில் படித்துக் கொண்டிருந்த பாக்கியராஜாவைப் படிப்புக்கு முழுக்குப் போட்டுவிட்டு பசுவினைப் பராமரிக்க வைத்துவிட்டார். இக் குடும்பம் பரம்பரையாக இப்பகுதியில் மாட்டு மந்தையை வளர்த்து வருகின்றது. இக்குடும்பத்தைப்போல வேறும் பல குடும்பங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாட்டு மந்தைச் சொந்தக்காரர்களாக இருக்கின்றனர். ஐ[illegible]த என்ற ஓர் இளைஞரையும் சந்தித்தோம். பத்தொன்பது வயதான அவர் தமது குடும்பத்தின் 75 மாடுகளைப் பராமரிக்கிறார். இவற்றுள் 25 பாற்பசுக்கள். அவற்றிலிருந்து 10 லீற்றர் பாலே மாத்திரம் சபைக்கு வழங்குகிறார்.

ஆயினும் இக்குடும்பத்தவர்கள் மாடுகளை முறைப்படி வளர்க்கிறார்கள் என்று சொல்வதற்கில்லை. இப்பகுதியில் புல் ஓரளவு செழிப்பாக வளர்வதால் பால் உள்ள மாடுகளில் பாலைக் கறந்துவிட்டு, எல்லா மாடுகளையும் காட்டுப்பக்கம் துரத்திவிடுகிறார்கள். இளங்கன்றுகளை மாத்திரம் மிகச் சிறிய அடைப்புக்களுள் மறித்துவைக்கிறார்கள். இந்த அடைப்புக்கள் கன்றுகளின் சலத்தினால் சேறும் சகதியாகவும் இருக்கும். கன்றுகள் படுப்பதற்கும் போதிய இடமிருக்காது. நெரிசற்பட்டுக்கொண்டு நிற்கும். இப்படியான சூழ்நிலையில் பல கன்றுகள் நோய்வாய்ப்பட்டு இறந்துவிடுகின்றன. இதனால் அவர்களின் பசுச்செல்வம் குறைகிறது.

இப்பகுதியில் உள்ள மாட்டுச் சொந்தக்காரர்கள் எல்லாரும் பால் கறந்து விற்கிறார்கள் என்றும் சொல்லிவிட முடியாது. சிலர் பசுக்களில் உள்ள பாலைக் கன்றுகளே குடிக்கவிடுகிறார்கள். மற்றும் சிலர் பாற்சபைக்கு எப்போது பால்விற்கக் கூடிய வாய்ப்பு இருப்பதனால் காலையில் மாத்திரம் பாலைக்கறந்து சபைக்கு விற்கிறார்கள். அவ்வளவுதான்—பசுக்களுக்குப் பிண்ணாக்கு, தவிடு போன்ற அடர்த்தீனி எதுவும் வைக்கும் வழக்கம் அவர்களுக்குக் கிடையாது. அப்படி எல்லாம் வைக்கால் கட்டாது என்கிறார்கள். ஆண்டுக்கு ஒருமுறை மேலதிகமாக உள்ள மாடுகளை விற்றுப்பெறும் வருவாயை அவர்கள் பெரிதாக மதிக்கிறார்கள்.

மாடுகளுக்கு நோய் ஏற்பட்டால் ஏதாவது நாட்டு வைத்தியம் செய்வார்கள். வாய்ப்புண், காற்புண் வியாதி, மூக்கிலிருந்து குருதி பெருகும் நோய போன்ற தொற்று நோய்களை வேளைக்கே தடுப்பு மருந்துகள் செலுத்தித் தவிர்ப்பதில் அதிக அக்கறை காட்ட மாட்டார்கள். விரிவாக்க உத்தியோகத்தர்கள் தேடிவந்து, மாடுகளுக்குத் தொற்று வியாதித் தடுப்பு ஊசி மருந்துகள் குத்த வேண்டும் என எதிர்பார்ப்பார்கள்.

தங்கள் தொழுவங்களில் சேரும் சாணத்தைத் திரட்டித் தங்கள் வயல்களுக்குப் போட்டு விளைச்சலை அதிகரிக்க வேண்டும் என்ற ஆர்வங்கூட அவர்களுக்கு அதிகமில்லை. இப்பகுதிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து லொறி கொண்டு வந்து மாட்டுரம் ஏற்றிப் போகிறார்கள். ஒரு லொறி மாட்டு உரம் ஏறக்குறைய 150 ரூபாவுக்கு விற்கிறார்கள். இரண்டு மூன்று லொறி உரம் விற்று ஒரே முறையில் ஐந்நூறு ரூபா வரையில் கிடைப்பது அவர்களுக்குப் பரம சந்தோசமாக இருக்கிறது.

இப்பகுதி மாட்டுச் சொந்தக்காரர்கள் ஒரு பெருங் குறைபாட்டைப் பற்றியே அடிக்கடி பல்லவி பாடுகிறார்கள். அதாவது தங்கள் மாடுகளுக்கு மேய்ச்சல் தரை அற்றுப்போகிறது என்பதே யாகும். இது உண்மை. இப்பகுதியில் பல குடியேற்றத் திட்டங்கள் திறக்கப்பட்டுள்ளன. அதனால் தரிசாகக் கிடந்த நிலங்கள் எல்லாம் வயல்களாக மாறியுள்ளன. காலாகாலமாகத் தன்னிச்சையாக இப்பகுதிகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேய்ந்து திரிந்த மாடுகளுக்குத் தடைகள் வந்துவிட்டன. ஒன்றும் அறியாத மாடுகள் பச்சையைக் கண்டு வயல்களுள் புகுந்து சேதம் விளைக்கின்றன. கஷ்டப்பட்டுக் கமஞ்செய்த கமக்காரர்கள் ஆத்திரத்தில் மாடுகளை மூர்க்கத்தனமாகத் தாக்குகிறார்கள். இதனால் வயல் சொந்தக்காரர்களுக்கும் மாட்டுச் சொந்தக்காரர்களுக்கும் இடையில் மனக்கசப்பும், குரோதமும், அவநம்பிக்கையும் வளர்கின்றன. குடியேறியுள்ள வயற்காரர்கள் வேலி வைக்கவோ முள்ளுக்கம்பி அடிக்கவோ வசதி அற்றவர்கள். மாட்டுச் சொந்தக்காரர்கள் ஜனப்பெருக்கத்தின் காரணமாகவும், சமூகாயத் தேவை காரணமாகவும் குடியேற்றத் திட்டங்கள் திறக்கப்படுகின்றன என்பதையும், அதனாலேயே மேய்ச்சல் நிலங்கள் குறைந்து வருகின்றன என்பதையும் போதியளவு உணராதவர்களாக இருப்பதனால், பரம்பரையாக அவர்கள் மாடு வளர்க்கும் முறையில் எவ்வித மாற்றத்தையும் புகுத்த விரும்பாதிருக்கிறார்கள். [illegible] சிலவற்றைக் கைவிட்டு புதிய சிலவற்றைக் [illegible] கைக்கொள்வதில் ஏற்படும் தயக்கம் சமூகாய சிக்கல்களைத் தோற்றுவிக்கின்றன.

உள்ள மேய்ச்சல் தரைக்கு ஏற்றவாறு மாடுகளின் எண்ணிக்கையைக் குறைப்பதும், சிந்தி, தார்பார்க்கார் போன்ற இந்திய இனக் காளைகளைக் கொண்டு முதற்படியாக பசுக்களின் தரத்தை உயர்த்துவதும் அதிக ஆகாயத்தையும் குறைந்த சிரமத்தையும் தரும் என்று சுட்டிக்காட்டினாலும் அவர்களுக்கு அவ்வளவு நம்பிக்கை ஏற்படுவதாக இல்லை. எவராவது முன்னோடிக் கமக்காரர் இரண்டொருவரேனும் குறைந்த எண்ணிக்கையில் சிறந்த இன மாடுகளை வளர்த்து வெற்றியைச் சாதித்துக் காட்டினார்களானால், ஒருவேளை மற்றவர்களும் அவர்களைப் பின்பற்ற முன்வரக்கூடும்.

மன்னம்பிட்டிப் பகுதியில் மாட்டுக் களவு பெருமளவில் நடைபெறுதல் பசு வளர்ப்போர் மனதைப் பெரிதும் தளர வைக்கிறது. கிராமங்களில் சில கையாட்களை வைத்துக்கொண்டு மாடுகளைக் களவாகக் கடத்துகிறார்கள். பதினைந்து மாடுகளை விலைகொடுத்து வாங்கிவிட்டு, ஐந்து மாடுகளைக் களவில் பிடித்து அவற்றுடன் சேர்த்துக் கடத்துகிறார்கள். காடுகளில் மேயும் மாடுகளைக் களவில் அறுத்து இறைச்சியைக் கடத்துகிறார்கள். பட்டிகளில் அடைத்து நிற்கும் மாடுகளைக்கூட இரவில் சத்தப்படாது வந்து கடத்திக்கொண்டு போய் விடுகிறார்கள் எனவும் கமக்காரர்கள் கவலை தெரிவிக்கிறார்கள். மாடுகள் களவுபோகும் தொல்லையை அறவே நீக்கத்தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

பொலநறுவையை அடுத்துள்ள நாலைந்து இடங்களில் அரசு பெரிய பாற்பண்ணைகளை வைத்து நடத்துகிறது. இவற்றில் உயரின எருமைகள், மாடுகள் வெவ்வேறாக வளர்க்கப்படுகின்றன. பராமரிப்பு முறைகள், இனப்பெருக்க முறைகள், கன்று வளர்ப்பு முறைகள் யாவும் அரச தொழுவங்களில் முன்னேற்றகரமான முறைகளில், அதாவது விஞ்ஞான முறைப்படி நடக்கின்றன. அப்படியிருந்தும் இப்பண்ணைகள் சூழவுள்ள கமக்காரர்கள் மத்தியில் ஒரு கணிசமான தாக்கத்தை இன்னும் ஏற்படுத்த இல்லையே என்பதைக் கவனிக்கும்போது வேதனையாக இருக்கிறது. ஒரு புறத்தில் விஞ்ஞான ரீதியில வெற்றிகரமாகப் பாற்பண்ணைத் தொழில் நடக்கிறது. மறுபுறத்தில் கமக்காரர்கள் இவற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றைப் பார்த்தாவது தங்கள் பசு வளர்ப்பு முறைகளை மாற்றிக் கொண்டு முன்னேற வேண்டும் என்ற துடிப்பில்லாது, பழமை சார்ந்தவர்களாக, பற்றுக்குறை வருவாயில் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். பாற்பண்ணைத் தொழிலில் உள்ள குறித்த ஒரு சூழலின் விவரணையை இங்கு கண்டோம்.

அடுத்து, கலஹாவை நோக்கிச் செல்வோம். கலஹா பகுதி மத்திய மலைநாட்டில் உள்ளது. கண்டியிலிருந்து கலஹா ஏறக்குறைய 28 மைல்களுக்கு அப்பால் உள்ளது. கலஹா, தெல்தொட்டை ஆகிய பகுதிகள் மலைப் பிராந்தியங்கள் — கடல் மட்டத்திலிருந்து மூவாயிரம், மூவாயிரத்து ஐநூறு அடி உயரமுடையவை. இங்கு எல்லாப் பக்கமும் செழிப்பான தேயிலைத் தோட்டங்கள் உள்ளன. தேயிலைத் தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்களும் கிராம மக்களும் பசு வளர்ப்பில் ஈடுபடுகின்றனர். ஐரோப்பிய இனப்பசுக்களை வளர்க்க உகந்த சுவாத்தியம் இப்பகுதிகளில் நிலவுகிறது என்பதைச் சொல்லவேண்டியதில்லை.

இங்குள்ள மக்கள் அநேகமாக பிறேசியன், ஜெர்சி, மற்றும் உயர்ந்த கலப்பினப்பசுக்களையே வளர்க்கின்றனர். ஆனால் மன்னம்பிட்டி பகுதியில் போன்று இங்கு எவரும் நூற்றுக் கணக்கில் மாடுகளை வளர்ப்பதில்லை. ஒருவர் ஆகக்கூடியது இரண்டு மாடுகளுக்கு மேல் வளர்ப்பதில்லை. அவர்களுக்கு மேய்ச்சல் நிலம் கிடைக்காது. ஆதலால் அவர்கள் தொழுவங்களிலேயே பசுக்களைக் கட்டி வளர்க்கின்றனர். தோட்ட நிர்வாகத்தினர் தேயிலை தநிலைக்கு உகவாக காணித்துண்டுகளைக் கொடுத்திருந்தால், தொழிலாளர்கள் அவற்றில் உயர்ந்த புல் இனங்களை நட்டு, மாடுகளுக்கு வெட்டிப் போடுகின்றனர். வாய்க்கால்களிலும் பாதை ஓரங்களிலும் இயற்கையாக வளரும் புல்லையும் வெட்டிப் போடுகிறார்கள்.

பசு வளர்ப்பின் முக்கிய குறிக்கோள் அவர்களுக்குப் பால் வியாபாரமேதான். ஆகவே அவர்கள் பிண்ணாக்கு, தவிடு போன்ற அடர்த்தீனிகளை மாட்டுக்கு வைத்துப் பால் உற்பத்தியைப் பெருக்குவதிலும், பசுக்களைக் கவனமாகப் பராமரிப்பதிலும் கவனஞ் செலுத்துகிறார்கள். இவர்களது பசு ஒவ்வொன்றும் இரண்டாயிரம் மூவாயிரம் ரூபா பெறக்கூடியது.

கறக்கும் பாலைப் பெரும்பாலும் இவர்கள் பாற்சபைக்கே விற்கிறார்கள். பால் சேகரிக்கும் முகவர்கள் பல மோசடிகள் செய்வதாகவும், இதனால் தங்கள் உற்சாகம் குன்றிப் போவதாகவும் முறைப்பட்டார்கள். பிண்ணாக்கு, தவிடு போன்றவற்றின் விலைகள் ஏற்றமாக இருப்பதனால், பசு வளர்ப்பில் கிடைக்கும் ஆதாயம் குறைகிறது எனவும் குறைபட்டார்கள். வன்செயல்களிலும் இப்பகுதி மக்களின் பத்திர உணர்வைப் பாதித்துள்ளது. அதனாலும் அவர்களுக்குப் பசு வளர்ப்பில் உள்ள ஆர்வம் குறைந்து காணப்பட்டது. மாட்டுத் தீனிகளின் விலை நிலையாக இருக்க உதவினால் அவர்கள் பாற்பண்ணைத் தொழிலில் தீவிர கவனஞ் செலுத்த இடமுண்டு.

எல்லோரும் அப்பகுதியில் சுகாதார முறைப்படி தொழுவங்கள் அமைத்துள்ளார்கள் என்று சொல்வதற்கில்லை. பசுக்களின் சுகாதாரத்தைப் பேணும் முறைகளைப் பற்றி அவர்கள் இன்னும் பல விடயங்களை அறியச் செய்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவியாக இருக்கும். மிருக வைத்திய சேவை இப்பகுதிகளில் இன்னும் 'மம் பட இடமுள்ளது.

வீசுந்தர மலையைச் சேர்ந்த தேவர் வடிவேல் என்பவரைச் சந்தித்தோம். பாற்பண்ணைத் தொழிலில் அவர் உற்சாகமாக ஈடுபட்டுள்ளார். அவரிடம் ஐந்து உயரினப் பசுக்கள் இருப்பதாக வும், நாள் ஒன்றுக்கு 30 லீற்றர் பாலை சபைக்குக் கொடுப்பதாகவும் தெரிவித்தார். இவரது சகாக்களான செல்லையா, இரத்தினம், டேவிட், ராஜாராம் ஆகியோரும் முறையே 7, 3, 1, 3 உயரின பசுக்களை வளர்க்கின்றனர். இவர்கள் நால்வரும் மொத்தம் 75 லீற்றர் பாலை நாளொன்றுக்குச் சபைக்கு வார்க்கிறார்கள்.

தெல்தோட்டையைச் சேர்ந்த கிருஷ்ணசாமி என்பவர் நன்கு கல்வி அறிவு பெற்றிருப்பதால் மற்றவர்களிலும் பார்க்க முன்னேற்றகரமான முறையில் பாற்பண்ணை நடத்துகிறார். பாற்பண்ணைத் தொழிலுக்கு சர்வதேச அபிவிருத்தி நிதி, வங்கிகளின் மூலமாக வழங்கும் கடனைப்பெற்று, இந்நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்ட பிறேசியன் பசுக்கள் மூன்றை வாங்கி வளர்க்கிறார். அவற்றைவிட இங்குள்ள ஐரோப்பிய இனப் பசுக்கள் இரண்டையும் வளர்க்கிறார். செம்மையான பராமரிப்பு முறைகளைக் கடைப்பிடிக்கிறார். இறக்குமதியான பசுக்களின் பாலில் கொழுப்புச்சத்து 2.5 சதவீதத்துக்குக் குறைவாக இருக்கிறது என்ற காரணத்தால் சபை தன்னிடமிருந்து 30, 35 லீற்றர் பாலை வாங்க மறுக்கிறது என்பது அவரின் முறைப்பாடு. பொதுவாக பிறேசியன் பசுக்களில் பால் கூடுதலாக இருப்பதும், கொழுப்புச் சத்துக் குறைவாக இருப்பதும் ஒப்புக்கொள்ளப்பட்ட விடயம். இப்படிப் பிரச்சினை உள்ளவர்கள் தங்கள் தொழுவத்தில் ஜேர்சி பசுக்களையும் வளர்த்தால், அவர்கள் வழங்கும் பாலின் சராசரி கொழுப்பு வீதம் சபை ஏற்கக்கூடிய அளவுக்கு இருக்கும்.

இங்குள்ளவர்கள் சிறிய அளவில் பாற்பண்ணை வைத்திருப்பவர்கள். குடும்பத்தில் உள்ளவர்களே எல்லா வேலைகளையும் செய்கிறார்கள். ஆதலால் அவர்களது குடும்பத்துக்குப் பாற்பசு வளர்ப்பு துணை வருமானத்தைத் தருகிறது. அவர்களுக்குள்ள சிரமங்களைத் தீர்ப்பதற்கு பசு வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் ஒன்றைச் சரிவர அமைத்து நடத்தினால் பெரும் உதவியாக இருக்கும். இதனால் பால் உற்பத்தியும் பெருகும். நாட்டில் பாற்பண்ணைத் தொழிலுக்கு நல்ல எதிர்காலமும் ஏற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கமநல செய்திமுனை

## உயர்ந்த இனப்பசுக்கள் இறக்குமதி

சிறந்த இனங்கள் எனக் கருதப்படும் பிறேசியன், எம்ஆர்வை, பசுக்களைத் தேசிய பண்ணை விலங்குச் சபை அண்மையில் ஒல்லாந்திலிருந்து இறக்குமதி செய்துள்ளது. ஒல்லாந்து தேசத்தில் பாலுக்குப் பெயர் பெற்ற எம்ஆர்வை இனப்பசுக்கள் இந்நாட்டுக்கு இப்போதே முதன் முறையாகக் கொண்டுவரப்பட்டுள்ளன. பாகிஸ்தானில் இருந்து கொண்டுவரப்பட்ட 'சாஹிவால்' இனப்பசுக்கள் இப்போது கந்தளாயில் உள்ள புகையிலைப் பண்ணையில் வளர்க்கப்படுகின்றன. இவற்றின் கன்றுகள் கமக்காரர்களுக்கு வழங்கப்படும்.

## கன்று வளர்க்கும் தொழுவங்கள்

அட்டனிலும் கண்டியிலும் கன்று வளர்க்கும் தொழுவம் ஒவ்வொன்றைத் தேசிய பண்ணைவிலங்குச் சபை நிறுவவிருக்கிறது. சிறிய அளவில் மாட்டுப்பண்ணை வைத்திருப்பவர்கள் கன்று வளர்ப்பில் அதிக கவனஞ் செலுத்தாதிருப்பதால் தொகையான கன்றுகள் செத்துப்போகின்றன. இந்நாட்டில் ஏறக்குறைய 42 சவீத கன்றுகள் இறப்பதாகப் புள்ளிவிபரம் காட்டுகிறது. இந் நிலையை மாற்றுதற்காக, தனிப்பட்டவர்களிடமிருந்து இளங்கன்றுகளைச் சபை வாங்கி இத் தொழுவங்களில் செம்மையான முறையில் வளர்க்கும். இக் கன்றுகள் வளர்ந்து சினைப்பட்ட இளம் பசுக்களானதும் கமக்காரர்களுக்கு விற்கப்படும்.

## தொகுதிக்கொரு விற்பனைக்கூடம்

சந்தைப்படுத்தல் அபிவிருத்தித் திணைக்களம் ஒவ்வொரு தேர்தற் தொகுதியிலும் ஒரு விற்பனைக் கூடத்தைத் திறக்கவுள்ளது.

இத் திட்டத்தின்கீழ் சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் ஒருவரும் ஒவ்வொரு தேர்தற் தொகுதிக்கும் நியமிக்கப்படுவர். விற்பனைக்கூட அலுவல்களை மேற்பார்வை செய்வதும், களத்திலுள்ள சந்தைப்படுத்தல் அம்சங்களைக் கவனிப்பதும் அவரது கடமைகளாக இருக்கும்.

## கிராம மட்டத்தில் பயிர்ச் செய்கை உத்தியோகத்தர்கள்

இப்போது கமத்தொழில் விளைவுப் பெருக்கக் குழுக்களும் பயிர்ச் செய்கைக் குழுக்களும் இடை நிறுத்தஞ் செய்யப்பட்டிருப்பதால் அவற்றின் பணிகளை கமநலச் சேவைப் பிரிவின் பிராந்திய உத்தியோகத்தர்கள் மேற்பார்வை செய்து வருகின்றனர். அத்துடன் கிராம மட்டத்தில் பணிபுரிய 4000 பயிர்ச் செய்கை உத்தியோகத்தர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Appropriate Technology Services
121, POINT-PEDRO ROAD
NALLUR, JAFFNA
No ----------

## அரச காணிகளை அத்துமீறிப் பிடித்திருப்பவர்கள் வெளியேற்றப்படுவர்

அரச காணிகளை அத்துமீறிப் பிடித்திருப்பவர்களை அகற்றுவதற்கான சட்டம் ஒன்று நிறைவேற்றப்படவிருக்கிறது. தற்போதுள்ள ஏற்பாடுகளின் படி இவர்களை அகற்றுதற்கு நீண்டகால தாமதம் உண்டாகிறது. அதன் காரணமாக, மகாவலித்திட்டம் போன்ற அபிவிருத்தி நிகழ்ச்சிகள் தடைப்படுகின்றன.

உத்தேச சட்டத்தின்படி அரசாங்க அதிபரே காணி அதிகாரியாக இருப்பர். சட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்கு முன்னரே, அரசாங்க அதிபர் அத்துமீறிக் காணி பிடித்தவர்களை வெளியேற்றும் கட்டளையை நீதவானிடமிருந்து பெறமுடியும்.

## காணிக்குடியேற்றமும் காணி உரிமையும்

அரசு நிறைவேற்றிவரும் காணிக் குடியேற்ற நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இதுவரையில் ஏறக்குறைய எட்டு இலட்சம் காணிகள் வழங்கப்பட்டுள்ளன. காணி பெற்றவர்களுக்கு உரிமையளிக்கும் உறுதி வழங்கப்பட முன்னர் காணிகள் அளக்கப்பட்டு காணிப் பதிவேட்டில் பதியப்படுகின்றன. இவ்வாறு அளக்கப்பட்டுப் பதியப் பட்டுள்ள காணிக்காரர்களுக்கு இது வரையில் 5,15,000 'எல்' படிவங்கள் வழங்கப்பட்டுள்ளன. இப்படிவங்களை நிரப்பி பணங் கொடுத்து அக் காணிகளைச் சொந்தமாகப் பெற்றுக் கொள்ளலாம். இது வரையில் 129000 பேர் தமக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளைச் சொந்தமாக வாங்குவதற்கு இணங்கியுள்ளனர்.

## ● சிரிப்பொலி

சிரிப்பொலி கேட்டால் சிந்தை மகிழ்ந்திடும். எத்தனை கோடி இன்பம் வைத்த இறைவன், சிரிப்பொலியையும் அவற்றுள் ஒன்றாக வைத்தான். சிரிப்பொலியைக் கிளப்பக்கூடிய சம்பவங்கள், துணுக்குகள், சொற்பிரயோகங்கள் எத்தனையோ உங்கள் அனுபவத்தில் ஏற்பட்டிருக்கலாம். சிரிப்பொலி வயல்புலத்திலும் கேட்கும். வாழ்க்கைப் புலத்தின் பல கோணங்களிலும் கேட்கும். இப்படிச் சிரிப்பொலி தோன்றுதற்கு அடிநாதமாக ஏதோ ஒரு காரணம் இருக்கும். அதனை நீங்கள் அறிந்திருப்பீர்கள். நீங்கள் இரசித்துச் சிரித்தால் மட்டும் போதாது. மற்றவர்களையும் சிரிக்க வையுங்கள். சிரிப்பு அனுபவத்தை எழுதி அனுப்புங்கள். 'கமநலம்' அதனை வெளியிட்டு சிரிப்பொலி பரவச் செய்யும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாற்பண்ணைத் தொழில் நடத்தும் பெண்கள்

***தொன்று தொட்டு பெண்கள் பசு வளர்ப்பதிலும் பாற்பண்ணைத் தொழிலை நடத்துவதிலும் ஆர்வமும் அக்கறையும் காட்டி வந்தனர் என்பதை அறிவோம். வட மொழியில் 'மகள்' என்பதைக் குறிக்கும் சொல் பால் கறப்பவள் எனவும் பொருள்படும். மக்கள் குலம் நிலைத்து வாழ்ந்து கமச் செய்கையில் ஈடுபடத் தொடங்கிய காலத்திலிருந்து பசு வளர்ப்பும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 6000 ஆண்டுகளுக்கு மேலாக மனிதன் பசு வளர்த்து வருகிறான் என ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள்.***

பல நாடுகளிலும் இப்போது பசு வளர்ப்பில் ஆண்களே பெரிதும் ஈடுபட்டு வருகின்றனர். எனினும் பெண்களும் இப்போது பாற்பண்ணைத் தொழிலை நடத்துவதில் தீவிரமாக ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

இந்தியாவின் குஜராத் மாநிலத்திலே உள்ள ஒரு சிறு கிராமத்தில் பாற்பண்ணைத் தொழிலை முழுக்க முழுக்கப் பெண்களே நடத்திப் பெரும் வெற்றி கண்டுள்ளனர் என்ற செய்தி கிடைத்துள்ளது. இதனை யிட்டு ஆண்கள் பெண்கள் எல்லோருமே சந்தோஷமும் பெருமையும் கொள்ளலாம்.

இப்போது வெற்றிக் கதையைப் பார்ப்போம். 'கற்கோதரா' என்பது ஒரு கிராமத்தின் பெயர். இக் கிராமம் குஜராத் மாநிலத்திலுள்ள ஆனந் நகரிலிருந்து ஏறத்தாழ 3 மைல்களுக்கு அப்பால் அமைந்துள்ளது. போக்குவரத்துப் பாதை வசதிகள் அவ்வளவு செம்மையாகவில்லை. சுற்றுப் புறத்திலுள்ள பல கிராமங்களுக்கு மின்சார வசதி கிடைத்துள்ளது. ஆனால் இந்த கற்கோதரா கிராமத்திற்கு அந்த வசதி இன்னமும் வந்து சேரவில்லை. பலகாலமாக அக் கிராமத்து வாசிகள் பொதுவாக பல குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்கள் என்ற கருத்து அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் இடையே நிலவி வருகிறது. அதனாலேயோ என்னவோ அது பலகாலமாகப் புறக்கணிக்கப் பட்ட ஒரு கிராமமாக இருந்து வந்துள்ளது. இப்படியான சூழ்நிலைகள் இருந்தும் கடந்த 10 வருடங்களுக்குள் இக்கிராமத்தின் சமூக பொருளாதார நிலைமை மெச்சத்தக்க முறையில் முன்னேற்றம் அடைந்துள்ளது. இத்தகைய உன்னத முன்னேற்றத்திற்கு, அங்கே அமைந்துள்ள பாற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணை உற்பத்தியாளர் சங்கமே மூல காரணம் எனக் கண்டுள்ளார்கள்.

சிக்கல்கள் சிரமங்கள் ஏற்படும் போது மனம் தளராது முன்னேற்றம் காண முனைந்தால் சில புதிய நல்ல திருப்பங்களும் பளிச்சிடுவது இயல்பு. இப்படியான ஒரு நிலை கற்கோதர கிராமத்திலும் ஏற்பட்டதாலேயே அங்குள்ள பாற்பண்ணைக் கூட்டுறவுச் சங்கத்தைப் பெண்களே அமைத்து அவர்களே அதனை நிர்வகிக்கவும் வேண்டி ஏற்பட்டது.

இப்படி ஒரு சங்கம் அமைப்பதற்குத் தூண்டுகோலாகவும் சில காரணங்கள் இருந்தன. முன்னர், 3 மைல்களுக்கு அப்பாலிருந்த அடுத்த ஊர்ப் பாற்பண்ணைச் சங்கத்திற்கு கற்கோதர கிராம மக்களும் பால் கொண்டு போய் வார்த்து வந்தார்கள்.

ஒவ்வொரு நாளும் இப்படி பல மைல்கள் நடந்துபோய் பால்வார்த்து வருதல் அவ்வூர் மக்களுக்குச் சிரமமாக இருந்தது. மாரிகாலங்களில் இப்படி நடந்து போய் அடுத்த ஊரில் பால்கொடுத்து வருவதும் அக்கிராமத்திற்கு முடியாமல் இருந்தது. அப்படியான மாரி காலங்களில் கறக்கும் பாலை விற்பது கூட சிறிய கமக்காரர்களுக்குக் கஷ்டமாக இருந்தது.

நிலைமை இப்படி இருந்த சமயத்தில் கற்கோதர ஊராட்சி மன்றத்திற்கு ஒரு பெண்ணும் உறுப்பினராகத் தேர்ந்து எடுக்கப்பட்டார். அவர் சகல மக்களது முன்னேற்றத்திற்காக உழைப்பவர் என்ற கருத்து எல்லோரிடமும் நிலவியது. இதனால் நாளடைவில் அவர் உள்ளூராட்சி மன்றத் தலைவராகவும் ஆக்கப்பட்டார்.

அவர் ஒரு முறை ஆனந் பாற்பண்ணைக் கூட்டுறவுச் சங்கம் நடத்திய கருத்தரங்கு ஒன்றிற்குப் போக முடிந்தது. அப்போது அந்த ஊர்களிலெல்லாம் பாற்பண்ணைக் கூட்டுறவுச் சங்கங்கள் எப்படி வெற்றிகரமாகச் செயல்பட்டுக் கொண்டு இருக்கின்றன என்பதையும், அவற்றால் அவ்வூர் மக்களின் வாழ்க்கைத்தரமும் எவ்வாறு சீர்படுகிறது என்பதையும் அவரால் அறிய முடிந்தது.

அவர் தன்னுடைய கிராமத்திலும் இப்படி ஒரு பாற்பண்ணை உற்பத்தியாளர் சங்கம் அமைக்க முனைந்தார். அதற்காக ஆனந் பால் யூனியனையும் உதவி தருமாறு வேண்டினார். அருகிலுள்ள ஊரில் ஏற்கனவே பால் உற்பத்தியாளர் சங்கம் இருக்கையில் எப்படி இன்னமும் ஒரு சங்கத்தை கற்கோதர கிராமத்தில் அமைப்பது என யூனியன் முதலில் தயங்கியது. ஆனால் கற்கோதர உள்ளூராட்சி மன்றத் தலைவி விட்டதாகவில்லை. அவரது ஓயாத வற்புறுத்தலின் காரணமாக கடைசியாக ஆனந் யூனியன் அக்கிராமத்தில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தை அமைக்க வழி வகுத்தது. உடனே உள்ளூராட்சி மன்றத் தலைவி பசு மாடுகள், எருமைப் பசுக்கள் வளர்ப்போர் சிலரைச் சந்தித்துப் பேசி, அவர்களை உறுப்பினராகச் சேர்த்து பால் கூட்டுறவுச் சங்கம் ஒன்றை நிறுவினார். இதில் ஒரு தனிச் சிறப்பு என்னவென்றால், ஆண்களுடன் போட்டி, பூசல், மோதல்கள் ஏதேனும் வரக்கூடாது என்பதற்காக பாற்சங்கத்தில் பெண்கள் மாத்திரமே உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். ஆண்களும் இந்த ஏற்பாட்டில் தலையிடாது கண்ணியமாக ஒதுங்கிக் கொண்டனர். இதனால் பால் கூட்டுறவுச் சங்கம் நடத்திய பெண்களுக்கு பொறுப்புக் கூடி விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கள் பெயரைக் காப்பாற்றி, சங்கத்தை எப்படியாவது வெற்றிகரமாக நடத்த வேண்டும் என்ற ஆவல் அவ்வூர்ப் பெண்கள் எல்லோரிடையேயும் ஓங்கி நின்றது. இப்படிப்பட்டதொரு ஆவல் அவர்களுக்கு ஏற்பட்டதால் சாதாரணமாகப் பெண்களிடையே தோன்றும் போட்டி, பூசல், பொறாமை போன்றவை தலைகாட்டவில்லை. கட்டுப்பாட்டுடனும் பாற்பண்ணை நடத்துவதில் ஆண்களுக்குத் தாங்கள் சளைத்தவர்கள் இல்லை என்ற ஆர்வத்துடனும் கற்கோவள கிராமத்துப் பெண்கள் பால் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தைக் கண்ணைப்போல் வளர்த்து வருகிறார்கள்.

இக்கிராமத்தில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் வெற்றிகரமாக நடத்துவதற்கு சமூக சூழ்நிலைக் காரணம் ஒன்றும் இருந்தது. அவ்வூரிலே வேங்கர் என்ற ஒரு ஹரிஜன சமூக மக்களும், முஸ்லீம்களும் பெரும்பான்மையாக வாழ்கின்றனர். வேங்கர் குல ஆண்கள் தங்கள் பெண்கள் அடுத்த ஊருக்கு பால் கொண்டு செல்வதை விரும்பாதிருந்தார்கள். அவ்வூர் முஸ்லீம்களோ தங்கள் பெண்கள் வீட்டுக்கு வெளியே போவதையே அதிகம் விரும்பமாட்டார்கள். இப்படிப் பிரச்சினைகள் இருந்ததினால் உள்ளூரிலேயே பால் விற்கக்கூடிய ஓர் ஏற்பாடு செய்யப்பட்டதும், எல்லோரும் அதனை வரவேற்க முற்பட்டார்கள். இதுவும் பால் சங்கம் வளர்வதற்குத் துணையாக இருந்த முக்கிய காரணங்களுள் ஒன்று.

கமத்தொழில் நடைபெறும் காலங்களில் பொதுவாக இக்கிராமத்திலுள்ள ஆண்கள் எல்லோருக்கும் அக்கிராமத்திலேயே வேலை கிடைக்கக் கூடிய வாய்ப்பு இருக்கும். கமப்போகம் முடிந்ததும் கிராமத்தில் வேலை அற்ற ஆண்கள் வேறு ஊர்களுக்காவது போய் ஏதாவது தங்களுக்கு ஏற்ற வேலைகளை தேடிக் கொள்வார்கள். பெண்களின் நிலையோ வேறு விதம். கமத்தொழில் போகத்தின் போது அன்றாடம் கூலிக்குவேலை செய்து பிழைக்கும் பெண்கள் கமப்போகம் முடிந்ததும் வேலையற்று இருப்பார்கள். அதனால் அவர்களது குடும்ப வருவாயும் குறைந்து விடுகிறது. பலர் கைம்பெண்களாகவும் குடும்பப் பெண்களாகவும் இருப்பதால் அயல் ஊர்களுக்குப் போய் வேலை செய்து பிழைப்பது இயலாத காரியம். இத்தகைய சூழ்நிலையில், பசு வளர்ப்பதும் பால் கறந்து விற்பதும் அவர்களுக்கு ஒரு பொருத்தமான தொழிலாக அமைந்தது. இதில் கைம்பெண்கள், குடும்பப் பெண்கள், இளம் பெண்கள் எல்லோருமே முழு ஆர்வத்துடன் ஈடுபட முடிந்தது. அவர்கள் சேமித்த காசையும் பசு வாங்குவதற்காக கூட்டுறவுச் சங்கம் கொடுக்கும் கடனையும் சேர்த்து ஒவ்வொரு குடும்பமும் இரண்டொரு பசுக்களாவது தவறாது வாங்க முன்வந்தது. பசு வளர்ப்பின் மூலம் அவர்களது நாளாந்த வருவாயும் படிப்படியாக உயர்ந்து வருவதைப் பெண்களால் காண முடிந்தது. இதன் காரணமாக அவ்வூர் பாற்பண்ணைக் கூட்டுறவுச் சங்கத்தில் ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் குறைந்தது ஒரு பெண்ணாவது உறுப்பினராகச் சேர்ந்திருப்பதை அவதானிக்க முடிந்தது.

தங்கள் பெண்கள் பாடுபட்டு உழைத்து மிச்சம் பிடிக்கும் பணம் எப்படியும் குடும்ப நல்வாழ்விற்கே பயன்படும் என்பதை உணர்ந்த ஆண்கள், அவர்களது சேமிப்பைப் பற்றியோ பணத்தைப் பற்றியோ எதுவித கேள்வியும் கேட்க முற்படுவதில்லை. பெண்கள் தங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஷ்டப்படி செலவு செய்வதற்கு உரிய பணமோ சேமிப்போ அது என உணர்ந்த ஆண்கள் அதை எவ்விதத்திலும் தொடுவதில்லை. இதனால் அவ்வூர் பெண்களுக்கும் ஒரு விதபொருளாதார பாதுகாப்பு உணர்வும் தைரியமும் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது.

பாற்பண்ணைக் கூட்டுறவுச் சங்கத்தின் வழிநடத்தலுடன் பெண்கள் பசு வளர்ப்பில் மிகக் கவனம் செலுத்துகின்றனர். பசுவின் தீன், சுகாதாரம், அதனை வளர்க்க வேண்டிய சூழல் ஆகியவற்றில் அதிக கவனம் செலுத்தினாலேயே பசு வளர்ப்பின் மூலம் ஆதாயம் பெறலாம் என்பதையும் அவர்கள் தெரிந்து கொண்டுள்ளனர். இதனால் மற்றும் ஒரு நன்மையும் ஏற்பட்டது. பசு வளர்ப்புக்கு இவ்வளவு கவனம் செலுத்துவது அவசியமாக இருக்கும்போது மக்களும் தங்கள் நல்வாழ்விற்கு அவர்களது உணவு, சுகாதாரம், வீடு போன்ற விடயங்களில் எவ்வளவு கவனம் செலுத்த வேண்டும் என்பதை அவ்வூர்ப் பெண்கள் தாங்களாகவே உணரத் தலைப்பட்டனர். இப்படிப்பட்ட உணர்வால் இவ்வூர் மக்களது வாழ்க்கைத் தரமும் உயரத் தொடங்கியது.

செயற்கை முறையின் மூலம் இனவிருத்தி செய்து உயர்ந்த இனப் பாற் பசுக்களை விருத்தி செய்வதும், இத்தகைய பாற் பசுக்களினால் எவ்வளவு கூடுதலான நன்மையை அடைய முடிந்தது என்பதையும் அவர்கள் நேரிடையாகவே உணரவும் அறியவும் முடிந்தது.

இத்தகைய சூழ்நிலையினால் மக்களிடையே குடும்பநல முறைகள் ஏற்படுத்தக் கூடிய நன்மையையும் அவர்கள் பசு வளர்ப்பின் மூலம் மறைமுகமாக உணர முடிந்தது எனத் தெரிவிக்கப்படுகிறது.

பாற் பண்ணைத் தொழிலில் பெண்கள் முழு மூச்சாக ஈடுபடத் தொடங்கியதால் பின்தங்கிய நிலையிலுள்ள ஒரு கிராமம் முன்நிலைக்கு வந்து கொண்டிருக்கிறது என்பதை இக்கட்டுரையில் கண்டோம். எங்கள் நாட்டிலும் பாற்பண்ணைத் தொழிலில் முடிந்த வரையில் பெண்களும் ஈடுபட்டு உழைப்பதற்கும், அதனை விருத்தி செய்து வெற்றி பெறச் செய்வதற்கும் உதவ மக்கள் முன்வருவார்கள் என நம்புகின்றோம்.

## நாட்டுப் பாடல்

எங்கள் வாழ்வுடன் பின்னிப் பிணைந்திருப்பது வேளாண்மைத் தொழில். உழும்போது, களைபிடுங்கும் போது அருவி வெட்டும்போது, சூடுமிதிக்கும் போதெல்லாம் அலுப்பை சலிப்பை மறக்க ஆனந்தமாகப் பாடும் பாடல்கள் தான் எத்தனை. இப்படியான இனிய நாட்டுப் பாடல்களை உங்கள் 'கமநலம்' சஞ்சிகையில் வெளியிடக் காத்திருக்கின்றோம். உங்களுக்குத் தெரிந்த நாட்டுப் பாடல்களை எழுதி அனுப்புவீர்களா ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் நாட்டின் இறைச்சித் தொழில்

**மக்கள் உணவில் சம போஷாக்கு இருப்பதற்கு விலங்குப் புரதமும் அவசியம். விலங்குப் புரதத்தை மனிதன் ஆதியிலிருந்து பலவகையான விலங்குகளின் இறைச்சியில் இருந்து பெற்று வருகிறான். காலப்போக்கில் முன்னேற்றம் கண்ட மனிதன், விலங்குப் புரதத்தை ஆடு, மாடு, எருமை, ஒட்டகம் போன்ற விலங்குகளின் பாலிலிருந்தும், பாற்பதார்த்தங்களிலிருந்தும், கோழி முட்டை, வாத்து முட்டை போன்றவற்றில் இருந்தும் பெறுவதற்குத் தெரிந்து கொண்டான். ஆதலால் விலங்குகளை வளர்த்துப் பயன்பெறும் வழக்கம் வளர்ந்ததுடன், இறைச்சிக்காக விலங்குகளை வதைக்கும் வழக்கமும் ஓரளவு குறையத் தொடங்கியது என்றே சொல்ல வேண்டும்.**

ஆயினும் இறைச்சி உண்ணும் வழக்கம் மக்களிடையே குறைந்துவிட்டது என்று சொல்ல முடியாது. குளிர்மிகுந்த மேலைநாடுகளில் சுவாத்தியம் காரணமாகவும் சமய, சமூக பழக்க வழக்கங்கள், கருத்துக்கள் தடையாக இல்லாது இருப்பதன் காரணமாகவும் அங்கெல்லாம் பெரும்பான்மையான மக்கள் இறைச்சியையும் தங்கள் உணவுடன் சேர்த்துக் கொள்கின்றனர். உஷ்ண சுவாத்தியம் நிலவும் நாடுகளில் இறைச்சி உணவுக்கு அத்துணை அவசியம் இருக்காது. தவிர, கீழைத்தேச நாடுகளில், அஹிம்சையை விரும்பும் பண்பாடு பரவலாக மக்களிடையே நீண்டகாலம் வேரூன்றி இருந்ததாலும், கொல்லாமை, புலால் உண்ணாமை போன்ற கருத்துக்களை பெரும்பான்மையான மக்கள் ஆதரித்ததாலும், இறைச்சி உண்ணும் பழக்கம் வெகுவாகப் பரவியிருக்கவில்லை. ஆயினும், அந்நியர் ஆட்சிக்குப் பின்னர் பொதுவாகவும், கடந்த இரண்டு உலக யுத்தங்களுக்குப் பின்னர் குறிப்பாகவும் இலங்கையில் இறைச்சி உண்போர் எண்ணிக்கை பெருகி வருகிறது என்பதை மறுப்பதற்கில்லை.

இலங்கையில் இறைச்சி உண்போரில் 90 சதவீதத்தினர் மாட்டிறைச்சியையும் புசிக்கின்றனர். இங்கு வருடாந்தம் ஒருவர் சராசரி ஐந்து இறாத்தல் இறைச்சி புசிப்பதாகப் புள்ளி விபரம் கூறுகிறது. ஆனால் இறைச்சியே புசிக்காதவர்களை நீக்கிப் பார்த்தால், இவ்வீதம் சற்றுக் கூடுதலாகவே இருக்கும். எனினும் இந்நாட்டில் புசிக்கப்படும் இறைச்சி விகிதத்தை ஏனைய நாடுகள் பலவற்றுடன் ஒப்பிடும்போது அது குறைவாகவே காணப்படுகிறது. இப்படிக் குறைந்த அளவில் இறைச்சி புசிக்கப்பட்ட போதிலும், இந்நாட்டின் இறைச்சித் தேவையை ஈடுசெய்ய ஆண்டொன்றுக்கு ஏறக்குறைய மூன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றரை இலட்சம் மாடுகள் வெட்டப்பட வேண்டி இருக்கிறதாம்.

எமது நாட்டில் முக்கிய உணவுப் பொருட்களது உற்பத்தி, விநியோகம் முதலியன ஓரளவிற்குச் செம்மை அடைந்துள்ளன. ஆனல் இறைச்சி வழங்கல், விநியோகம் ஆகியவற்றைப் பொறுத்த வரையில் திருப்திகரமான நிலை இன்னும் எற்படவில்லை என்றே சொல்ல வேண்டும். களவாக மாடுகளைப் பிடித்து அறுத்தல், நோயுற்ற மாடுகளைத் தக்க பரிசோதனைக்கு உட்படுத்தாது அறுத்தல், இறைச்சியை நிறைகுறைவாக விற்றல் போன்ற முறைப்பாடுகள் இன்னும் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் வந்துகொண்டிருப்பதிலிருந்து இறைச்சி உற்பத்தியின் நிலை இன்னும் செம்மையடைய வேண்டியிருக்கிறது என்பது புலப்படும்.

இத்தொடர்பில் நம் நாட்டு இறைச்சி உற்பத்தியின் பின்னணியைச் சற்று உற்று நோக்குவது பொருத்தமாக இருக்கும். மற்றும் பல நாடுகளைப் போலவே இங்கும் பாலுக்கும் வேலைக்கும் வளர்க்கும் மாடுகளிலும் எருமைகளிலும் சிலவற்றைத் தேர்ந்து இறைச்சிக்குப் பயன்படுத்துகிறார்கள். இறைச்சிக்காக மாடுகள், எருமைகளில் முக்காற் பங்குக்கு மேலாக, கால்நடைகள் பெருவாரியாக வளரும் உலர்வலயத்தில் இருந்தே கிடைக்கிறது. உதாரணமாக 1968 ஆம் ஆண்டில் 244,000 மாடுகளும் 90,000 எருமைகளும் இறைச்சிக்காக அறுக்கப்பட்டுள்ளன என அறியக் கூடியதாகவுள்ளது. சாதாரணமாக முழு வளர்ச்சி அடைந்த இந்நாட்டு மாடுகளின் நிறை 350 இறாத்தலாகவும் எருமைகளின் நிறை 500—600 இறாத்தலாகவும் இருக்கும். ஆகவே மாட்டிலிருந்து 150 இறாத்தல் இறைச்சியும் எருமையிலிருந்து 300 இறாத்தல் இறைச்சி வரையிலும் சராசரியாகக் கிடைக்கும்.

பல உற்பத்தித் தொழில்கள் தொடர்பாகப் புள்ளிவிபரங்கள் உள்ளன. ஆனல் இறைச்சி உற்பத்தி தொடர்பான புள்ளி விபரங்கள் சரிவரக் கிடைப்பதில்லை. இதற்கு மாடு, எருமை போன்றவை களவாக இறைச்சிக்குக் கொல்லப்படுதல் ஒரு காரணமாகும். இறைச்சிக்காகச் சட்டப்படி கொல்லப்படும் மிருக எண்ணிக்கை போன்று மூன்றில் ஒரு பங்கு களவாகக் கொல்லப்படுகின்றன.

1958-ஆம் ஆண்டின் பண்ணை விலங்குச் சட்டத்தின்படி, ஒருவர் வளர்க்கும் விலங்கினங்கள், எண்ணிக்கை பற்றிய விபரங்கள் யாவும் கிராம சேவகரிடத்துப் பதியப்படுதல் வேண்டும். இன்னர் இன்ன விலங்கின் சொந்தக்காரர் என்பதை உறுதிப்படுத்தும் கிராம சேவகரது கடிதம் இல்லாது எவரும் எந்த விலங்கையும் வேறு எவருக்கும் விற்க முடியாது. பிரதேச மிருக வைத்தியரது அனுமதியின்றி இறைச்சிக்காக எந்த விலங்கையும் கொல்லக்கூடாது. பால் தரக்கூடிய மிருகங்களும், வேலைக்கேற்ற மிருகங்களும் இறைச்சிக்காகக் கொல்லப்படுதல் முற்றாகச் சட்டப்படி தடை செய்யப்பட்டுள்ளது. உதவி அரசாங்க அதிபரது அனுமதி இல்லாது எவரும் மிருகங்களை மாவட்டத்துக்கு வெளியே எடுத்துச் செல்ல முடியாது. இப்படிப் பல சட்ட திட்டங்கள் இருந்தும் இவற்றை மீறிக் களவிலே மிருகங்கள் இறைச்சிக்காக அறுக்கப்படுதல் பகிரங்க இரகசியமாகவே இருக்கிறது. எங்கள் கால்நடைச் செல்வத்தில் பெரும் பாகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிய கமக்காரர்களிடமும் கிராம மக்களிடமுமே இருக்கின்றது. எனவே இவர்களே களவில் கால்நடைகள் அறுக்கப்படும்போது பெரிதும் பாதிக்கப்படுபவர்களாக இருக்கின்றனர்.

நாடு முழுவதிலும் மொத்தம் 150 மாடு அறுக்கும் நிலையங்கள் உள்ளன. இவை யாவும் உள்ளூராட்சித் தாபனங்களது மேற்பார்வையின் கீழேயே இயங்குகின்றன. கடும் சுகாதார நியதிகளை அனுசரித்தே இறைச்சிக்காக விலங்குகள் அறுக்கப்பட வேண்டும். எனினும் எல்லா இடங்களிலும் இது நடைமுறையில் முழுமையாகக் கடைப்பிடிக்கப்படுகிறது எனச் சொல்ல முடியாது. சில பகுதிகளில் மாட்டுக்கொட்டில் போன்ற சுகாதார வசதியற்ற இடங்களிற்கூட மாடுகள் அறுக்கப்படுவதாக கேள்விப்படுகிறோம். சுகாதார சூழலில் இறைச்சிக்காக மிருகங்கள் அறுக்கப்படுகின்றனவா என்பதைக் கவனிக்கும் அதிகாரம் பிரதேச மிருக வைத்தியருக்கு உண்டு. இவ்வதிகாரம் திறன்படப் பிரயோகிக்கப்பட்டால், சுகாதார சூழலில் இறைச்சிக்காக மிருகங்கள் அறுக்கப்படுதல் உறுதிப்படும்.

கொழும்பு மாநகரசபை நகர மக்களுக்கு வேண்டிய இறைச்சியைப் பெறத்தக்க ஏற்பாடு செய்துள்ளது. சுகாதார அமைப்புக்களுடன் கூடிய மாடு அறுக்கும் கூடம் ஒன்றை மாநகரசபை நடத்தி வருகிறது. தலைமை மிருக வைத்தியரின் மேற்பார்வையின் கீழ் இங்கு மாடுகள், எருமைகள், ஆடுகள் போன்றவை இறைச்சிக்காக அறுக்கப்படுகின்றன. இறைச்சி வியாபாரிகள் கொண்டு வரும் மிருகங்கள் பரிசோதிக்கப்பட்டு இங்கு அறுக்கப்படுகின்றன. நாள் ஒன்றுக்கு இந்நிலையத்தில் 160 மாடுகள் வரையில் அறுக்கப்படுகின்றன.

கொழும்பிற்கு இறைச்சி விநியோகிக்கும் மொத்த வியாபாரிகள் 14 பேர் உள்ளனர். இவர்களுக்கு நாட்டின் பலபாகங்களிலிருந்தும் கால்நடைகளை வாங்கி அனுப்பும் முகவர்கள் 100 பேர்வரையில் இருக்கின்றனர். இம்முகவர்கள் கிராமப் பகுதிகளில் உள்ள தங்கள் கூட்டாளிகள் மூலமாக கால்நடைகளை வாங்குகின்றனர்.

இறைச்சி உற்பத்தி வளர்ச்சி அடைந்துள்ள நாடுகளில் அது உற்பத்தியாளர், கிராக்கி, நுகர்வாளர் ஆகிய காரணிகளை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது. எங்கள் நாட்டில் அப்படியான ஒரு நிலை ஏற்பட்டுள்ளதெனச் சொல்ல முடியாது. உதாரணத்துக்குக் கொழும்பின் இறைச்சித் தேவையில் 60 சதவீதமே ஈடுசெய்யப்படுவதைக் குறிப்பிடலாம். இன்று இந்நாட்டில் கால்நடைச் சொந்தக்காரர், இறைச்சி உண்பவர் இரு சாராரிலும் பார்க்க மிருகங்களை வாங்கி இறைச்சிக்காக அறுக்கும் இடைப்பட்டவர்களே அதிக நயத்தைப் பெறுகிறார்கள். கால்நடைச் சொந்தக்காரர்கள் அநேகமாகத் தங்கள் பணத்தேவையை முன்னிட்டே அவற்றை விற்கின்றனர். பெரும்போகப் பயிர் விளைச்சல் கிடைக்கும் காலத்தில் அதாவது தை மாதத்திலிருந்து வைகாசி மாதம் வரையில் கமக்காரர்கள் அநேகமாகக் கால்நடைகளை விற்கமாட்டார்கள். அப்போது அவர்கள் கையில் ஓரளவு பணம் புழக்கத்தில் இருப்பது இதற்கு ஒரு காரணம். ஆனி மாதத்துக்கும் மார்கழி மாதத்துக்கும் இடையிலே அநேகம் மாடுகள் விலைப்படுகின்றன. உலர்வலயத்தில் இக்காலத்தில் வரட்சி நிலவுவதால், புல்லுக்கும் தண்ணீருக்கும் தட்டுப்பாடாக இருக்கும். கமக்காரர்களுக்கும் கமஞ்செய்யக் காசுத் தேவை ஏற்படும். அத்துடன் மழைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலமும் ஊடே வருவதனால் மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கப் போவதும் பெரிதும் தடைப்படுகிறது. அதனால் மீனுக்கும் தட்டுப்பாடு ஏற்படுகிறது. இந்நிலையில் இறைச்சிக்கு அதிக கிராக்கி தோன்றுகிறது. இக்காரணங்கள் யாவும் மேலதிகமாகவுள்ள மிருகங்களை இறைச்சிக்கு விற்கக் கமக்காரர்களைத் தூண்டுகின்றன.

மிருகப் புரதத்தைத் தரும் பால், பாற்பொருட்கள், முட்டை, இறைச்சிபோன்றவற்றுக்கான கிராக்கி காலப்போக்கில் அதிகரிப்பதாக மத்திய வங்கி நடத்திய ஆய்வு ஒன்று காட்டுகிறது. ஜனத்தொகைப் பெருக்கம், மக்களின் உணவுச் சுவையில் ஏற்படும் மாற்றம், மக்களுக்குள்ள வாங்கற்சக்தி அதிகரித்தல் போன்றவை இதற்குக் காரணமாக இருக்கலாம். கால்நடை பெருகுவதற்கு ஓரளவு காலம் பிடிக்கிறது. இப்போதுள்ள கால்நடைச் செல்வத்தை நாம் காப்பாற்றுவதாயின் ஆண்டுதோறும் இறைச்சிக்காக அறுக்கப்படும் கால்நடைகளின் எண்ணிக்கை, ஆண்டுதோறும் ஏற்படும் பெருக்கத்தளவு அல்லது அதனிலும் சற்றுக் குறைவாகவே இருத்தல் வேண்டும். ஆனால் நடைமுறையில் இப்படிச் சில வருடங்களில் நடந்ததாகத் தெரியவில்லை. இறைச்சிக்குப் பயன்படுத்தப்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கை அவற்றின் பெருக்கத் தொகையிலும் பார்க்கக் கூடுதலாக இருந்துள்ளது. இப்படியான நிலை நீடித்தால் எங்கள் தேசீய கால்நடைச் செல்வம் விரைவில் அருகிப்போகும் ஆபத்துக்கூட ஏற்படலாம். இது ஒருபுறம் இருக்க, கிராக்கியை ஈடுசெய்வதற்காக மெலிவுற்ற, வளர்ச்சி குன்றிய மிருகங்கள் இறைச்சிக்குப் பயன்படுத்தும் மிருகங்களின் மொத்த எண்ணிக்கையில் 40 சதவீதம் வரையில் இருக்கும் என மதிப்பிடப்படுகிறது.

உலகச் சந்தையில் கால்நடைகளின் தோலுக்கு நல்ல மதிப்பு இருந்து வருகிறது. செருப்பு, சப்பாத்து போன்ற காலணிகள், பந்து, பை போன்ற விளையாட்டுப் பொருட்கள், உறை, வார், துருத்தி போன்ற கைத்தொழிற் பொருட்கள் மற்றும் பல நூற்றுக்கணக்கான பொருட்கள் தோலைக்கொண்டு செய்யப்படுகின்றன. எனவே மிருகங்களை இறைச்சிக்குப் பயன்படுத்தும்போது அவற்றின் தோலும் ஒரு முக்கிய உப உற்பத்தியாகிறது. சந்தைக்கு வரும் கால்நடைகளது தோல் எண்ணிக்கையைக் கொண்டு ஓரளவுக்குச் சரியாக இறைச்சிக்கெனக் கொல்லப்படும் மிருகங்களின் எண்ணிக்கையைக் கணிக்கலாம்.

மிருகங்களுக்கு மரக்கொம்பு, முள்ளுக்கம்பி போன்றவற்றால் காயம் ஏற்படும்போது தோலின் தரம் பாதிக்கப்படுகிறது. மிருகங்களை இறைச்சிக்காக அறுக்கும்போது கவலையீனமாக நடந்து கொண்டாலும் தோலுக்குக் கேடு விளையலாம். தோலின் தரம் கெடாது பார்த்துக் கொள்வதன் மூலம் கணிசமான தொகை பணத்தைக் காப்பாற்றலாம்.

இறைச்சி, தோல், ஆகியவற்றைவிட, இரத்தம், எலும்பு, கொம்பு, குளம்பு, பதங்கெட்ட இறைச்சி போன்றவையும் பெறுமதியான உப உற்பத்திப் பொருட்களாகும். இரத்தம், பதங்கெட்ட இறைச்சி ஆகியவற்றைக்கொண்டு சத்துமிக்க மிருக உணவு தயாரிக்கலாம். கொம்பு, குளம்பு போன்றவற்றிலிருந்து கைத்தொழிலுக்கு வேண்டிய பசை, ஜெலி போன்ற பொருட்களைத் தயாரிக்கலாம். இந்நாட்டில் கொழும்பு மாநகர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபை நடத்தும் இறைச்சிக்கள கூடத்தில் மாத்திரம் இவ்வுப பொருட்களைச் செம்மையாகப் பயன்படுத்தி விற்கின்றனர். உதாரணமாக, 1963—67 ஆம் ஆண்டுக் காலத்தில் இத்தகைய உபஉற்பத்திப் பொருட்களை விற்று 65 இலட்சம் ரூபாவை கொழும் மாநகரசபை சம்பாதித்துள்ளதைக் குறிப்பிடலாம்.

இறைச்சியின் விலை முன்னரிலும் பார்க்க அதிகரித்திருப்பதை அவதானிக்கலாம். 1967 இல் 95 சதமாக இருந்த மாட்டு இறைச்சியின் கட்டுப்பாட்டு விலை இப்போது 3-50 ரூபாவாகியுள்ளது. ஆயினும் சாதாரணமாக எலும்பில்லாத இறைச்சியை வாங்க இறுத்தலுக்கு ஐந்து ரூபா வீதம் கொடுக்க வேண்டியிருக்கிறது. இறைச்சி உண்போர் இப்படி அதிக விலை கொடுக்க வேண்டியிருந்தும், இறைச்சிக்கான மிருகங்களை வளர்த்து வழங்கும் கமக்காரர்களுக்கு பொதுவாக நல்ல விலை கிடைப்பதில்லை. இந்நிலை மாற்றப்பட வேண்டும். கால்நடைப் பெருக்கத்தில் பாரிய பாதிப்பு ஏற்படாத வகையில் மேலதிகமாகவுள்ள உகந்த மிருகங்களே இறைச்சிக்காகப் பயன்படுத்தப்படவேண்டும். மிருகங்களை இறைச்சிக்குப் பயன்படுத்தும்போது கிடைக்கும் உபபொருட்களைப் பேணிக்காக்க வேண்டும்.

# கட்டுரைகளை வரவேற்கிறோம்

வாசகர்களிடமிருந்து 'கமநலம்' தரமான கட்டுரைகளை வரவேற்கிறது. பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்படும் கட்டுரைகளுக்குக் காசு தருவோம். தமிழில் எழுதி ஒற்றை இடைவெளிவிட்டு 8¼" x 11¾" அளவு தாளில் தட்டச்சில் பொறிக்கப்பட்ட கட்டுரைகளுக்கு பக்கம் ஒன்றுக்கு பதினைந்து ரூபா வீதம் (ரூ. 15/-) காசு தரப்படும்.

தமிழ் மொழியில் பெயர்க்கப்பட்டு, மேற்கண்டபடி தட்டச்சிலிடப்பட்ட கட்டுரைகளுக்கு பக்கம் ஒன்றுக்கு ஐந்து ரூபா வீதம் (ரூ. 15/-) காசு தரப்படும்.

காணி உடைமை, காணிக்குடியிருப்பு, உற்பத்திப் பொருளியல், சந்தைப்படுத்தல், கூட்டுறவும் கடனும், தகவற் தொடர்பு ஆகிய துறைகள் தொடர்பான சமூக பொருளாதார விடயங்களுக்கும் கமக்காரர்களுக்கும் பள்ளி மாணவர்களுக்கும் மற்றோருக்கும் பயன்படும் விடயங்களுக்கும் 'கமநலம்' குறிப்பாக அதிக வரவேற்பளிக்கும்.

கருத்துச் செறிவுமிக்க கட்டுரைகளை எழுதி அனுப்புமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாட்டுத் தீனி மலிவுற வழி

இந்நாட்டில் தயாரிக்கப்பட்ட ஐந்தாண்டுத் திட்டங்கள் ஒவ்வொன்றிலும் பண்ணை விலங்கு வளர்ப்புக்கு உரிய முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருந்தது. ஆயினும் பண்ணை விலங்கு வளர்ப்புத் திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டதென்று சொல்வதற்கு இல்லை. இதற்குப் பண்ணை விலங்குகளின் தீனி வகைகளது விலைகள் உயர்வாக இருந்தமை ஒரு பிரதான காரணமாகும். அதனால் பசு, பன்றி, கோழி போன்றவற்றை வளர்ப்போருக்கு ஊக்கம் தரக்கூடிய ஆதாயம் கிடைக்க முடியவில்லை.

பண்ணை விலங்கு வளர்ப்புக்கு அவசியமான தொழில் நுட்பம், மிருக வைத்திய நிபுணர்களது சேவை, மக்கள் உழைப்பு, நில வளம் ஆகியன இருப்பினும் பண்ணை விலங்குக்கு அவசியமான தீனி வகைகளைத் தக்க அளவில் உற்பத்தி செய்வதற்கு ஏற்றவாறு திட்டம் வகுக்கப்படாத வரையில் பண்ணை விலங்கு அபிவிருத்தித் திட்டம் எதுவும் வெற்றி அளிக்க முடியாது.

நீண்ட காலத்தேவை அடிப்படையில் இப்போது வகுக்கப்பட்டுள்ள கமத்தொழில் அபிவிருத்தித் திட்டத்தின்படி அடுத்த 20 வருட முடிவில் ஆண்டு ஒன்றுக்கு 2 இலட்சம் தொன் பண்ணை விலங்குத் தீனி அவசியப்படும். குறுகிய கால அடிப்படையில் 1982ம் ஆண்டு ஒரு இலட்சத்து அறுபதினாயிரம் தொன் விலங்குத் தீனி தேவைப்படும். இதில் அரைவாசி கோழி, பன்றி போன்றவற்றிற்கும் மிகுதி அரைவாசி பசுக்களுக்கும் வேண்டி இருக்கும். இப்போது இந் நாட்டில் ஏறக்குறைய 74 ஆயிரம் தொன் விலங்குத் தீனி உற்பத்தி ஆகிறது.

நீண்டகாலமாக இந் நாட்டில் உற்பத்தி ஆகும் முக்கியமான அடர்த் தீனி தேங்காய்ப் பிண்ணாக்கும் எள்ளுப் பிண்ணாக்குமே ஆகும். பொதுவாக நார் பொருள் 20 சத வீதத்திற்குக் குறைவாக உள்ள விலங்குத் தீனி எதனையும் அடர்த்தீனி எனக் கொள்ளலாம். பிண்ணாக்கின் விலை மிகக் கூடியதால் பாற்பண்ணைத் தொழில் நடத்துபவர் பெரிதும் பாதிக்கப்பட்டனர். பிண்ணாக்கின் விலைக்குறைவுக்கு ஒரு வழி தேங்காய், எள்ளு போன்றவற்றின் உற்பத்தியை அதிகரிக்கச் செய்தலாகும். தென்னந் தோட்டங்களில் மாடுகள் வளர்ப்பதன் மூலமும் மற்றும் உகந்த இரசாயன உரங்களைப் பாவிப்பதன் மூலமும் தெங்கு உற்பத்தியைக் கணிசமாக அதிகரித்தால் பிண்ணாக்கு உற்பத்தியும் ஆண்டுக்கு 45 ஆயிரம் தொன்னிலிருந்து 80 ஆயிரம் தொன் வரை அதிகரிக்கக் கூடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என எதிர்பார்க்கப்படுகிறது.

## நெல்லிலிருந்து கிடைக்கும் தவிடும் ஏனைய பதார்த்தங்களும்

நெல்லை ஆலையில் இட்டு அரிசி ஆக்கும்போதே கிடைக்கும் தவிட்டையும், குறுணல் போன்ற ஏனைய பதார்த்தங்களையும் தக்கவாறு திரட்டி எடுப்பதற்கு இன்னும் போதிய கவனம் செலுத்தப்படவில்லை என்றே தெரிகிறது. இன்று இந் நாட்டிலுள்ள பல நூற்றுக்கணக்கான நெல் குற்றும் ஆலைகளில் 'ஹலர்' இயந்திரத்தை உபயோகித்து நெல் குற்றும்போது கிடைக்கும் தவிடு அவ்வளவு உயர்ந்த தரமாக இருப்பதில்லை. ஏன் எனில் இத் தவிட்டில் தூளாக்கப்பட்ட உமியும் நிறையக் கலந்திருக்கும். இதனால் மிருகத் தீனியின் தரமும் போசாக்கும் பாதிக்கப்படுகிறது. இக்காரணத்தால் 'கோன்' முறைப்படி குற்றப்படும் இயந்திரங்களை நெல் குற்றும் ஆலைகளில் நிறுவினால் தரம் உள்ள தவிடு கிடைப்பதற்கு வழி ஏற்படும். ஆலையில் அரிசி குற்றப்படும்போது தவிடும் ஏனைய பதார்த்தங்களும் பெறுமதி வாய்ந்த உப உற்பத்திகளாகவே கருதப்படுகின்றன. இத்தகைய உப உற்பத்திகளில் கலந்திருக்கும் உமியின் வீதம் 20 சதமாக உள்ளது. இது 10-15% ஆகவேனும் குறைந்தால்தான் தவிடு, குறுணல் ஓர் அளவேனும் தரமாக இருக்கும். தவிட்டிலே 'பி' விற்றமின் நிறைய இருப்பதுடன் 17—18 சதவீத எண்ணெயும் இதில் அடங்கியுள்ளது. தவிட்டிலிருந்து இவ் எண்ணெயைப் பிரித்து எடுக்க முடிந்தால் தவிட்டின் பெறுமதி கூடுவதுடன் தவிட்டைப் பேணி வைக்கவும் முடிகிறது. இவ்வாறு எண்ணெய் பிரித்து எடுக்கப்பட்ட தவிடு பசுக்களுக்கான அடர்த்தீனியில் 40 சதவீதமாகவும் இருத்தல் வேண்டும்.

இன்று 14 இலட்சம் ஏக்கர் நிலத்தில் நெல் விளைவிக்கப்படுகிறது. மகாவலி அபிவிருத்தித் திட்டம் நிறைவேறியதும், நெல் விளையும் நிலப் பரப்பு மேலும் அதிகரிக்கும். ஆதலால் நெல் உற்பத்தியும், அதன் காரணமாக, மிருகத் தீனியான தவிட்டின் உற்பத்தியும் அதிகரிக்க இடமுண்டு. ஆகவே நெல்குற்றப்படும்போது தவிடு வீணாகாது பெறுதற்குத் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். மதிப்பீட்டின்படி அடுத்த ஆறு வருடங்களுள் மேலும் இரண்டு இலட்சம் ஏக்கர் நெல் விளைவிக்கப்படும் எனவும், சிறுபோகத்தின்போது இப் பரப்பில் அரைவாசியேனும் விளைவிக்கப்படும் எனவும், இதனால் 2½ இலட்சம் தொன் தவிடு மேலும் கிடைக்கும் எனவும் கணிக்கப்படுகிறது.

றப்பர் விதையிலும் புரதச்சத்து இருப்பதாகக் கண்டுள்ளார்கள். இவ் விதையில் உள்ள எண்ணெயைப் பிரித்தெடுக்கவும் இயந்திரம் ஒன்றை நிர்மாணித்துள்ளார்கள். இந்த இயந்திரத்தின் உதவியுடன் றப்பர் விதையிலுள்ள எண்ணெயை நீக்கிவிட்டு, கிடைக்கும் றப்பர் பிண்ணாக்கை மாட்டுத் தீவனமாகப் பயன்படுத்தலாம் எனவும் இதனால் கேடு எதுவும் ஏற்படாதெனவும் தெரிவிக்கப்படுகிறது. றப்பர் பிண்ணாக்கை உபயோகிப்பதாயின் இந் நாட்டிலேயே 8500 தொன் றப்பர் பிண்ணாக்குக் கிடைக்கக் கூடும் எனவும் மதிப்பிடப்படுகிறது.

சாறு பிழிந்தெடுத்த பின்னர் கிடைக்கும் கருப்பஞ் சக்கையையும் மாட்டுத் தீனியாகப் பயன்படுத்தலாம். இவ்வாறு பயன்படுத்தினால் ஏறக்குறைய 1500 தொன் மாட்டுத் தீனி கருப்பஞ் சக்கையிலிருந்து கிடைக்கலாம். இதைவிட, வெட்டிக் கழிக்கும் கருப்பந்தாளையும் உலர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்து மாட்டுத் தீனியாகப் பயன்படுத்தலாம். நாட்டில் விளையக்கூடிய கரும்பினை அடிப்படையாகக்கொண்டு பார்த்தால், கருப்பந்தாள் மூலம் 22,000 தொன் மாட்டுத்தீனி கிடைக்கக் கூடும் எனவும் மதிப்பிடப் படுகிறது.

உயர்ந்த இனப்புல்வகைகளை முறைப்படி நாட்டி வளர்த்தும் விலங்குத் தீனியைப் பெருக்கலாம். இந்நாட்டில் புல்லை வெட்டிக் குழிகளில் இட்டு வருடக்கணக்கில் சேமித்து வைக்கும் முறை இன்னும் செம்மையாக விருத்தியடையவில்லை. முன்னேறிய நாடுகளில் கடைப்பிடிக்கப்படுவது போல் இங்கும் புல்லை நெடுங்காலம் பேணிவைக்க முடிந்தால் விலங்குத் தீனியின் தட்டுப்பாட்டைப் பெருமளவிற்குப் போக்கலாம்.

---

# வேளாண்மைப் பழமொழிகள்......

(௨ம் பக்கத் தொடர்ச்சி)

மாடு இளைத்தாலும் கொம்பு இளைக்காது.
மாடு கெட்டால் தேடலாம்; மனிதர் கெட்டால் தேடலாமா?
மாடு பிடிச்சண்டைக்கு வலியப் போகாதே.
மாடு மேய்க்காமற் கெட்டது; பயிர் பார்க்காமற் கெட்டது.
மாடு நினைத்த இடத்தில் தொழுவம் கட்டுவார்களா?
முன்னேர் மாட்டை முகத்தில் அடிக்காதே.
வளர்த்த கடா மார்பிலே பாய்ந்தாற்போல.
நற்பெண்டிருக்கு ஒரு சொல்; நல்ல மாட்டிற்கு ஒரு சூடு.

## பசு:

பசு கறக்கிறது நாழி; உதைக்கிறது பல்லுப்போக.
பசு கறுப்பென்று பாலும் கறுப்பா?
பசுவின் வயிற்றில் தான் கோரோசனை கிடைக்கிறது.
பசுவைக் கொன்று செருப்பு தானம்செய்தது போல.
பாலைப் பார்த்துப் பசுவைக் கொள்.
பசு கிழமானாலும் பாலின் உருசி போகுமா?

## எருமை:

அருமையற்ற வீட்டில் எருமையும் குடியிராது.
எட்டு வருடத்து எருமைக்கடா ஏரிக்குப் போக வழிதேடும்.

**தி. குமரதேவன்—கொழும்பு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## PUBLICATIONS OF THE AGRARIAN RESEARCH AND TRAINING INSTITUTE

| *Documentation Series* | | *Local* |
|---|---|---|
| 1. Complete Proceedings of a Seminar on Social Science Research Methodology ... ... ... ... ... ... | Rs. | 4.00 |

| *Occasional Publication Series* | | |
|---|---|---|
| 1. Thannimurippu Paripalana Sabai by Ellman, A. O. and Ratnaweera, D. de S. ... ... ... | ,, | 2.50 |
| 2. Small Holdings of the Coconut Triangle ... ... ... | ,, | 2.50 |
| 3. The Role of Cultivation Committees in Agricultural Planning at Village Level by Gooneratne, Wilbert, Gunawardena, Tilak and Renner, Igle ... ... ... ... ... ... | ,, | 2.50 |
| 4. Environmental and Social Constraints on Paddy Production under Existing Conditions by Izumi, K. and Ranatunga, A. S. ... ... ... ... | ,, | 2.50 |
| 5. Fragmentation of Paddy Land by Ganewatte, T. P. ... ... ... ... ... ... | ,, | 2.50 |
| 6. 'Thattumaru' and "Kattimaru" Systems of Rotation of Cultivation of Paddy Land by Ganewatte, T. P. ... ... ... | ,, | 2.50 |
| 7. Socio-Economic Factors in Rural Indebtedness by Ganewatte, T. P. ... ... ... ... ... ... | ,, | 2.50 |
| 8. Water Management and Paddy Production in the Dry Zone of Sri Lanka by Chambers, Robert ... ... ... ... ... | ,, | 3.50 |
| 9. A Study of Seven Selected Agricultural Productivity Committees and Cultivation Committees by Asmar, Samir and Kumarakulatungam, R. V. ... ... | ,, | 3.50 |
| 10. Some Aspects of Paddy and Rice Marketing in Sri Lanka by Gunawardena, P. J., Perera, M.P. and Yoshimura, H. ... | ,, | 3.50 |
| 11. Sri Lanka and the International Food Crisis ... ... ... | ,, | 5.00 |
| 12. The Role of Statistics in Research—Statistical Considerations in designing a sample survey by Sanmugam, T. ... ... ... ... ... ... | ,, | 3.50 |
| 13. The Production and Marketing of Banana in Beminiwatte by Perera, M.F., Gunawardena, P.J. and Abeyratne, Fredrick ... | ,, | 3.50 |

**Inquiries:** Publication Assistant,

Agrarian Research and Training Institute,
P. O. Box 1522, 114, Wijerama Mawatha, Colombo,
Sri Lanka.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சமூகநல ஆராய்ச்சி நிறுவனத்தினால் அசோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒவ் சிலோன் லிமிட்டெட் கம்பெனியாரால் கொழும்பு டி. ஆர். விஜயவர்த்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் அச்சிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org